804

REGISTERED No. M. 6165. அணா 2

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

804/3-54

செப்டம்பர் 1954.

BOOKS 31 AUG


| விஷயம். | பக்கம். |
|---|---|
| இகலோக வாழ்வில் பரலோக சாந்தி .... ... | 1 |
| இஸ்லாம் தரும் இனிய போதனை (டி. எப். ஆர். மஜூலி ஸாஹிப் (பாகவி) ... | 7 |
| இரத்தச் சின்னம் (தொடர் கதை) | 15 |
| அழைக்கின்றோம் (வேளாங்கண்ணி எ. எம். எம். இப்ருஹீம்) | 23 |
| காஜா நிஜாமுத்தீன் ஔலியா ஜீவிய சரித்திரம் (அய்யம் பேட்டை S. அப்துல் ரஜாக் சாஹிப்) | 25 |


...ல் இஸ்லாம் ஆபீஸ்:
...நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

3L
187034

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணு. | 0–2–0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.


## அரபி ஓத கற்றுக்கொள்ளலாம்.

தமிழ் படித்த 14-15 வயது முதல் 30-35 வயது உட்பட்டவர்களுக்கு நாளொன்றுக்கு 2 மணி நேரமாக இரண்டு மாதத்திற்குள் குர்ஆன் கத்தம் முடித்துக்கொடுக்க கீழ்கண்ட விலாசத்தார் தயாராயிருக்கிறர். தேவைப்பட்டவர்கள் கீழ்கண்ட அட்ரஸுக்கு எழுதி கொள்ளவும்.

ஹஸரத் அப்துல் வஹாப் ஸாஹிப்.
ப்ஸார் நகரி P. O.
புத்தூர் தாலுக்கா. சித்தூர் ஜில்லா.

# பத்ஹுல் இஸ்லாம்.

## செப்டம்பர் 1954.

3 1 AUG 1954
MADRAS

## "இக லோக வாழ்வில் பர லோக சாந்தி"

இயற்கை நியதியின்படி, மனித இன ஜீவியம் இந்தப் பூலோக வாழ்க்கையோடு முடிந்து போய் விடுவதில்லை. இந்த சாதாரண வாழ்வுக்குப் பிறகு ஓர் உன்னத வாழ்வும் இருக்கிறது. அந்தப் பரம வாழ்வு சாஸ்வதமானதாகும்; அதற்கோர் முடிவு கிடையாது.

அந்தப் பரம வாழ்வில் மாந்தர்க்கு சுகபோக சௌக்கியம் கிடைக்கும்; அல்லது சஞ்சல மயமான கஷ்டங்கள் உண்டாகும். அந்த சுக போகத்துக்கும் சஞ்சலக் கஷ்டங்கட்கும் மூலகாரணமாய்-சாதனமாய் விளைக்களமாய் விளங்குவது இந்தப் பூலோகத்து மாந்தர் வாழ்வே யாகும்; அதாவது இப்புவன வாழ்வில் மனிதர், மேற் கூறிய இரண்டில் எது ஒன்றை அடைய முயல்வார்களோ, அது ஒன்றேதான் கிடைக்கும்.

இது சத்தியம்; இது உண்மை. ஆனால் இந்த உண்மையை பெரும்பாலான மனிதர்களுடைய அறிவு உணர்ந்து கொள்வதில்லை. இது மனிதர்களுடைய கட்புலனுக்குத் தென்பட முடியாத ஒரு பரம ரகசிய வாழ்க்கையாகும். ஆயினும் தெளிந்த அறிவும், பகுத்துணரும் மனப்பண்பும் பெற்றவர்க்கு, இந்த பிற்கால வாழ்க்கையின் தோற்றம் கண் முன்னரே இருக்கும். இதை உணர்ந்து கொள்ளவும், கண்டு கொள்ளவும் ஆற்றலும் அக்கரையு மில்லாதவர்கள், இப்பூலோக வாழ்வையே மகாப் பிரமாதமானதாகக் கொண்டு, மனம் போனபடி யெல்லாம் நடந்து, துர்த்தர்களாய் உழல்வார்கள்.

## நபிமார்களின் எச்சரிக்கை.

நற்காரியமும் புண்ணியமும் செய்து உய்ய வேண்டிய மனிதனின் வாழ்வு, பாபங்கள் நிறைந்ததாயும் நன்மையின் நறுமணமே இல்லாததாயும் போய் விடுவதுண்டு. அப்படிப்பட்ட சமயங்களில், இயற்கைத் தெய்வத்தின் சார்பிலிருந்து எச்சரிக்கை செய்து, பரலோக வாழ்வைப் பற்றி வற்புறுத்தும் புண்ணியாத்மாக்கள் தோன்றுவதுண்டு. அவர்களே நபிமார்களும், ரஸூல்மார்களு மாவர்.

இத்தரணியில் ஆதிகாலந் தொட்டு, கண்ணியவான்களான எண்ணற்ற நபிமார்கள் தோன்றி, மனித சமூகத்தின் இகலோக வாழ்வை சீர்திருத்தும் நற்காரியங்களை இனிது புரிந்து வந்துள்ளார்கள். அதெப்படியெனில், மாந்தர்களுடைய உளளங்களில் 'ஆகிரத்' என்னும் பரலோக வாழ்வு ஒன்று உண்டென்ற நிச்சயத்தை உண்டாக்கி வைக்க முயன்று வந்தார்கள். அவர்களுடைய உள்ளங்களிலே இகபர இறைவனாகிய அல்லாஹு தஆலாவுடைய குண விசேஷத்தையும், மகாத்மியங்களையும் இலங்க வைக்க பெரிதும் பிரயத்தனம் எடுத்துக் கொண்டார்கள். ஆண்டவனைப் பற்றியும், ஆகிரத்தைப் பற்றியுமான கொள்கை கோட்பாடுகளை நேர்மைப்படுத்தி, மனதில் பதிய வைத்து வந்தார்கள்.

இப்படிப்பட்ட நல்ல சேவை செய்ய முற்பட்ட நபிமார்கள் மனித சமூகத்தின் உள்ளங்களில் தெய்வ பக்தியையும், பரலோக வாழ்வின் நினைவையும் நிலை நிறுத்தி வைப்பதற்காக, பல வகையிலும் முயன்று வந்தார்கள். தங்கள் கோட்பாடும் போதனையும் சத்தியமானவை என்று ருஜுப்படுத்துவதற்காக அவர்கள், மாந்தரின் பகுத்தறிவுக் கேற்ற ஆதாரங்களை யெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். விதண்டாவாதிகள் கேட்கும் ஐய வினாக்களுக் கெல்லாம் சரியான விடை பகர்ந்து சமாதானப் படுத்தினார்கள். யார் யாருடைய அறிவு எத்துணை பக்குவமுடையதாய் இருந்ததோ அதற்கேற்றவா றெல்லாம் சுமுகமான முறையில் இதோபதேசம் புரிந்து வந்தார்கள்.

## நம்பியவர்கள் மூமின்களானார்கள்.

நபிமார்கள் எடுத்துரைத்த இதோபதேச இதமொழிகட்கு பெரும்பாலோர் செவிசாய்க்கவில்லை. ஆகையினால் அவர்களுடைய மனது ஒத்துக் கொள்ளும் விதத்தில், பகுத்தறிவுக்கு உவந்த ஆதாரங்களையும் உதாரணங்களையும் எடுத்துக் கூறினார்கள். சரித்திர சம்பந்தமான வரலாறுகளை எடுத்துக் காட்டி, அதன் பலாபலன்களை விளக்கி நல்லறிவு புகட்டினார்கள். பிரபஞ்சத்தில் காணப்படும் எண்ணற்ற பிரமாணங்களை எண்பித்துக் காட்டி, அதன் மூலம் ஆண்டவனுடைய சத்தியங்களையும் மகாத்மியங்களையும் விளக்கினார்கள்.

18034

அந்த நபிமார்கள், தாங்கள் சொன்ன வண்ணம் நற்காரியங்களை அனுஷ்டித்தும் காட்டினார்கள். இதன் பலனால், அநேகர் தம் உள்ளங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொண்டு, நபிமார்கள் சொன்ன உண்மைகளை நம்பினார்கள். இவ்வுலக வாழ்வுக்குப் பிறகு மற்றொரு பரம வாழ்வு உண்டென்பதில் நம்பிக்கை வைத்தார்கள். அப்படி நம்பிக்கை வைத்தோரே ஈமான் கொண்ட மூமின்கள்.

அல்லாஹ்வையும் ஆகிரத்தையும் நம்பி ஈமான் கொண்ட உத்தம சிலர்களான மூமின்கள், தங்களுடைய இகலோக வாழ்க்கை முறையை சீர்படுத்திக் கொண்டார்கள். தங்கள் வாழ் நாள் முழுவதும் அந்த நபிமார்கள் சொன்ன இதோபதேசங்களின் பிரகாரமே நடந்து கொண்டார்கள். தங்களின் வாயிலிருந்து வெளிவரும் வாக்கியங்களானாலும் சரி, செயல் முறையில் நிகழும் நிகழ்ச்சிகளானாலும் சரி, மனத்தால் எண்ணப்படும் எண்ணங்களாயினும் சரி, அந்த மூமின்கள் சகலவற்றையும், தாங்கள் ஏற்றுக் கொண்ட சத்திய போதனைகளின்படியே சீர்படுத்திக் கொண்டார்கள். எனவே அன்னோரின் எஞ்சிய வாழ்நாளில் எந்தக் காரியமும் அந்த சன்மார்க்க நெறிக்கு விரோதமாய் நிகழ்பெறவில்லை. எனவே அல்லாஹுடைய உண்மை பக்தர்களாகவும் இறுதி நாளின் நிகழ்வைப் பயந்த முத்தகீன்களாகவும், ரஸூலுக்கும் நபிக்கும் வழிப்படும் நல்லோர்களாகவும் விளங்கினார்கள். இதனால் அன்னோர் மூமின்கள் என்று பாராட்டப் பட்டார்கள்.

## இப்போதும் சீர்திருத்தம் வேண்டும்.

பண்டைப் போது நபிமார்கள் புரிந்து வந்த காரியங்களை, அவர்களின் வழிப்படி நடந்து வந்த பெரியோர்களும் அறிஞர்களும் புரிந்து வரவேண்டு மென்று விதிக்கப்பட்டனர். அதன்படி, ஒவ்வொரு அறிஞனும் ஒவ்வொரு பாமரனுக்கு, தான் கொண்ட ஈமான் என்னும் அருஞ் செல்வத்தைப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டிய கடமையுடையவனாக்கப்பட்டான்.

எனவே, உங்களில் ஒவ்வொருவர் மீதும் இப்படிப்பட்ட கடமையிருக்கின்றது. நீங்கள் உங்கள் முன்னுள்ள சகோதர சகோதரிகளிடம் நபிமார்கள் செய்தது போன்ற சீர்திருத்த காரியங்களை செய்துவர கடவீர்கள். அந்த நற் சீர்திருத்தக் காரியத்தை எங்ஙனம் செய்வது?

சோதரீர்! முஸ்லிம்கள் எனப்படுபவர்களெல்லாரும் அல்லாஹு தஆலாவின் மீது ஈமான் கொண்டவர்களேதான். மேலும், ஆண்டவன் கட்டளைமீதும் ரஸூலின் சொற்கள் மீதும் ஈமான்கொண்டவர்களைத் தான் நாம் முஸ்லிம்கள் என்று சொல்கிறோம். அங்ஙனமிருக்க, முஸ்லிம்களை இன்னும் எப்படிநாம் சீர்திருத்த முடியும் என்று நீங்கள் ஐயுறலாம்.

இகலோக வாழ்வில் ஒருவன் ஈமான் கொண்டு முஸ்லிம் என ஆகிவிடுவதனால் மட்டும், அவன் பரலோகத்து சாந்தி வாழ்வை பெற்று விடமுடியாது; ஆகிரத்தை கொண்டு ஈமான் கொண்டவர் உண்மை யான முஸ்லிமாக விளங்கமுடியும்.

ஆகிரத்தைக்கொண்டு நம்பிக்கை கொள்வ தென்பது எப்படி? வெறுமனே வாயினால் சொல்லி விடுவதனால் மட்டும் அவன் விசிராந்தி பெற்றுவிடமுடியுமா? இல்லை. ஆகிரத்தில் அதாவது பரலோக வாழ் வில் தன் ஜீவாத்மாவக்கு நிகழப்போகும் சுகதுக்கங்களை நினைத்துப் பார்த்து, அங்கு சாந்தியும் சமாதானமும் அருட்பேறும் கிடைக்கும்படி யான விதத்தில், இந்த உலக வாழ்வில் தன்னுடைய சொல்லையும் செயலையும் சுபாவத்தையும் ஆக்கிக்கொள்பவன்தான், உண்மையில ஆகிரத்தைக் கொண்டு ஈமான் கொண்டவனாக கருதப்படுவான்.

## உலகம் ஓர் பரலோக விளை நிலம்.

“அத்துன்யா மஸ்ரஅத்துல் ஆகிரத்” (இவ்வுலகம் மறுலோகவாழ் வுக்கான ஒரு விளைவு பூமியாகும்) என்பது, நபிகள் நாயகம் ரஸூலுல் லாஹி (ஸல்) அவர்கள் அருள் மொழிந்த திருவாக்கியமாகும்.

அதாவது இந்த ஜீவியத்துக்குப பின் மறு ஜீவியமாகிய பரமலோக வாழ்வில் நாம் சுகமாக இருக்க வேண்டுமானால், அங்கு சாந்தமாய் வாழ்வதற்கு வேண்டிய சாமக்கிரியைகளை இங்கே சேகரித்துக்கொள்ள வேண்டும். நாம் இருப்பிடத்தைவிட்டு வேற்றிடம் போகும்போது, அங்கு நமது சௌக்கியத்துக்கு வேண்டிய சாமான்களை இவ்விடத்தி லிருந்தே எடுத்துக்கொண்டு போகிறோம். இவ்வாறே, பரலோக சாந்த வாழ்வுக்கு வேண்டிய பரம சாதனங்களை இங்கிருந்தே நாம் கொண்டு செல்லவேண்டும்.

காசும் பணமும் சொத்தும் பூமியும், வண்டியும் வாகனதியும் நம்மோடு பரலோகத்துக்கு வரமாட்டா! நாம் இங்கு செய்த புண்ணிய காரியங்களும் தானதர்மமும் தியானத்தவமும் பரோபகாரங்களும்தான் பிற்கால வாழ்வான ஆகிரத்தில் நமக்கு உதவக்கூடிய சாதனங்கள். இதை இங்கு இயன்ற மட்டும் அமிதமாய் தேடிக்கொள்வதுதான் ஆகி ரத்தை கொண்டு ஈமான் கொண்ட மூமினின் இலக்ஷணமாகும்.

## ஆண்டவனைப் பயப்படுவோம்.

ஈமான் என்பது விசுவாசம். அபிமானம் மட்டும் ஒருவரிடம் இருந்தால் போதாது. அந்த அபிமானத்துடன் கொஞ்சம் அச் சப்பாடும் இருக்க வேண்டும்.

தந்தையிடம் பிள்ளைகளுக்கு ஆசையும் அபிமானமும் இருக்கத் தான் செய்யும். இது சகஜம். அத்துடன் தந்தையிடம் பிள்ளைகளுக்கு

கொஞ்சம் பயமும் வேண்டும். நல்ல காரியங்களைச் செய்தால் தகப்பனர் சந்தோஷப்பட்டு பரிசுப் பொருள் அளிப்பார் என்று பிள்ளைகள் ஆர்வம் கொள்வது புதுமையல்ல. அத்துடன் தகப்பனர் சொன்னபடி நாம் இன்னின்ன காரியத்தை இன்னின்ன வண்ணம் செய்யாவிட்டால் அடிப்பார், தண்டிப்பார், கோபித்துக் கொள்வார், ஒதுக்கித் தள்ளுவார் என்ற பயமும் தனயனுக்கு வேண்டும்.

அல்லாஹுதஆலா, தாய்தந்தையரைவிட ஆயிரம் பங்கு மாந்தரிடம் அன்பும் அபிமானமும் அருள் தன்மையும் உடையவன்தான். ஆனல், தன்னுடைய வேதக் கட்டளையின்படி இகலோகத்தில் மனிதன் சீர்திருந்தி நடந்து சத்தியனுக விளங்காவிடில், பரலோக வாழ்வில் நிச்சயமாக இறைவன் தண்டிப்பான்- வேதனைப்படுத்துவான்- நரகத் துன்பம் அளிப்பான் என்று ஒவ்வொரு மாந்தனும் பயந்து நடந்து கொள்ளவேண்டும்.

இப்படி இறைவனிடம் அபிமானமும் அச்சமும் கொண்டு சீர் திருத்தி, பக்தராய், சத்தியராய், உத்தமராய் நடந்துகொள்ளும் இகலோக வாசிகளுக்கே, பரலோகத்தில் இறைவனின் கடாக்ஷமும் அருளும் சன்மானமும் சுவனபோகமும் சுகசாந்திமயமான அமரவாழ்வும் கிடைக்கும். எனவே இகலோக வாழ்வில் பரலோக சாந்தியை காணுவோம். வஸ்ஸலாம்

---


## லைலா மஜ்னூன்

அரபு தேச சர்தாருடைய அருமைக் குமாரனுகிய மஜ்னூனென்னும் வாலிபன், அழகில் சிறந்த லைலா என்னும் ஒரு பெண்ணரசி பேரில் காதல் கொண்டு, ஒருவரை ஒருவர்நேசித்து பல துன்பங்களுக்கு இலக்காகி, இறுதியில் சந்திக்கும் வரை நடந்துள்ள சரிதை இது. இது உர்து பாஷையில் லைலீ மஜ்னூனென்னும் பெயர் பெற்ற காவியமாக விளங்கி வந்ததை தமிழ் பாஷையில் மொழி பெயர்த்து அருமையான நாவலைப் போல் வசன ரூபமாய் அமைக்கப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1-4-0

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

## பாலேலாவின் மர்மம்

இது ஒரு அருமையான துப்பறியும் கதை. இதில் ஒரு பாங்கை மோசம் செய்ய சிலர் எத்தனித்ததையும் அது கைகூடா வண்ணம் செய்து அவர்களின் திருட்டு யோசனைகளை வெளியாக்கிய துப்பறியும் ஷம்ஸின் செயல்களும் விளக்கப் பட்டுள்ளது. இதன் விலை அணா. 8

தேவையுள்ளோர் 9 அணா ஸ்டாம்பு அனுப்பி வைத்தால் புக்போஸ்ட் மூலம் அனுப்பப்படும்.

## மாயமாய் மறைந்த மங்கை

இது ஓர் அருமையான துப்பறியும் நாவல்; திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்துள்ளது. இதில் ஒரு பெரிய பணக்காரன் விரோதிகளுக்குப் பயந்து தனக்கு ஆபத்து ஏதும் வராமலிருக்க பெயர் பெற்ற துப்பறியும் ஷம்ஸின் உதவியை நாட ஷம்ஸ் ஷெ வேலையின் நிமித்தம் அனுப்பிய ஏஜெண்ட் கொலையுண்டு, அந்த பணக்காரரும் காணமற் போய் விடுகிறார். இதை ஷம்ஸ் விசாரிக்க செல்ல, அங்கு ஒரு மாசற்ற மங்கை மாயமாய் மறைந்த மர்மத்தையும், ஷம்ஸ் தனது அஸிஸ்டெண்ட் சோடேவின் உதவியினல் சிறிதும் அஞ்சாமல் கொலைக் கூட்டத்தினடுவே துணிந்து சென்று மர்மங்களைக் கண்டு பிடித்து விளக்குகின்றார். இதைப் படிக்க ஆரம்பஞ் செய்வோர் கதை முழுவதையும் முடிக்காமல் புத்தகத்தை கீழ் வைக்க மாட்டார் என்பதிற் ஐயமில்லை. இதன் விலை அணா. 8

தேவையுள்ளோர் 10 அணா ஸ்டாம்பு அனுப்பி வைத்தால் புக்போஸ்ட் மூலம் அனுப்பப்படும்.

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# இஸ்லாம் தரும் இனிய போதனை.

டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் (பாகவி)

இஸ்லாம் மனித சமூகத்துக்கேற்ற ஒரு சிறந்த சன்மார்க்கம். இஸ்லாம் என்ற பெயரும் ஒழுக்க முறைகளும் மகான் முஹம்மத் நபி (ஸல்) அவர்களுடைய காலத்திலிருந்தே, உலக மாந்தர்கட்கு வியக்தமாய் போதிக்கப்பட்டு வந்தபோதிலும், இதன் அடிப்படைத் தத்துவங்களெல்லாம், மனிதகுல மூலப் புருஷராம் ஆதம் நபி தோன்றிய ஆதிகாலந்தொட்டே அனுஷ்டானத்தில் இருந்து வந்துள்ளது.

மனுஷ்யன், லோக விவகாரங்களில் நல்லொழுக்கத்துடனும் சத்குணத்துடனும், திகழ்ந்து, மனப்பரிசுத்தமும் அகத்தூய்மையும் பெற்று இனிது வாழ்ந்து உய்யவேண்டு மென்பதே இஸ்லாத்தின் இலக்ஷியம். இதை லோக மாந்தர்க்கு ஆதியில் தோன்றிய தீர்க்கதரிசிகளும், மகான்களும் போதகாசார்யர்களும், அந்தக் காலத்துக்கேற்ப சுருக்கமாகவோ, விரிவாகவோ, கண்டிப்பாகவோ, சுமுகமாகவோ போதித்து வந்துள்ளார்கள்.

இஸ்லாத்தின் போதனைகள் சமரஸத் தன்மை வாய்ந்தவை. சகல தேசத்தாருக்கும், சர்வ சமூகத்தாருக்கும் வாழ்க்கைக்கு ஒத்து வரக்கூடிய கோட்பாடுகளும், அனுஷ்டானப் பண்பாடும் நிறைந்தவை. முரட்டு அரபியருக்கும் சரியே, கருப்பு நீக்ரோக்களுக்கும் சரியே, வெள்ளை ஐரோப்பியருக்கும் சரியே, அந்தமுள்ள ஆசியாகாரருக்கும் சரியே, பொதுப்படையாய் வாழ்க்கை முறைக்கு முரணில்லாத முறையில் இணங்கிப் பொருந்தும் தததுவங்கள் நிறைந்தது இஸ்லாம்.

"சர்வலோகத்தையும் அண்டசராசரங்களையும் சிருஷ்டித்துப் பாதுகாக்கும் இறைவன் ஒருவன் உண்டு. அவன் பெயர் அல்லாஹ். அவ்வேக தெய்வத்தை அல்லும் பகலும் ஐங்காலமும், மாந்தர்கள் சிந்தித்து வந்தித்து வணங்கி வழி படவேண்டும். பிறர்களிடம் அன்பு செலுத்த வேண்டும். மற்றோரை சகோதரர்களாய்க் கருதி நட்புடன் நடந்து கொள்ள வேண்டும். யாருக்கும் மனவேதனையோ, சரீரத் துன்பமோ உண்டாக்கக் கூடாது. விரோதியையும் விரோதிக்கக் கூடாது."

இதெல்லாம் இஸ்லாத்தின் பொதுப்படையான போதனைகள். இதன்படி இனிது நடந்து கொள்பவன்தான் உண்மை முஸ்லிம்.

எல்லோருக்கும் நல்லவனாய் நடந்து கொள்ளும் உத்தம முஸ்லிமைத் தான், ஆண்டவனும் தன்னுடைய நல்லடியானாக ஏற்றுக்கொள்வான். அவ்வுத்தமனுக்கே மறுலோக வாழ்வில் 'ஜன்னத்' என்ற சுவர்க்க வாழ்வும், 'ஷபாஅத்' என்ற நற்பாக்கியமும் கிடைக்கும்.

இப்படியெல்லாம் இனிது நடந்துகொள்ள வேண்டுமென்றே திருக்குர்ஆன் போதிக்கிறது. மகான் முஹம்மத் நபியின் திருவாக்கியங்களும் கட்டளையிடுகின்றன. முஸ்லிம் மதாசிரியர்களும் போதகாசிரியர்களும் இந்த சமரஸ சன்மார்க்கத்தை போதித்து வந்துள்ளார்கள்.

இஸ்லாம் போதிக்கும் இவ்வினிய போதனையை அடிப்படையாகக் கொண்டு, முஸ்லிம் சகோதரர்களின் நலன் கருதி, சில விஷயங்களைச் சொல்கிறேன்.

## இஸ்லாத்தின் விசேஷம்.

இறைவனால் இப்பிரபஞ்சம் சிருஷ்டிக்கப்பட்ட ஆதிகாலந் தொட்டு, எத்தனையோ மகான்களும் எத்தனையோ சன்மார்க்கங்களை மனித சமூகத்துக்கு அவ்வப்போது போதித்துச் சென்றுள்ளனர். அவற்றில் பொதுப்படையான உபதேசங்களும் ஒழுக்க முறைகளும் போதிக்கப்பட்டு வந்துள்ளன. அம்மதானுஷ்டானங்கள், இன்ஸான்களாகிய மனிதவர்க்கத்தினருக்கு வணக்க ஒழுக்கங்களைப் போதித்தன; நன்மையைக் கொண்டு ஏவின; தீமையை விட்டும் விலக்கின; பாபங்களை விட்டு எப்படி தப்பி வாழ்வது, தீய விஷயங்களை விட்டு எப்படி ஒதுங்கி யிருப்பது என்ற அனுஷ்டானத்தையும் போதித்தன.

லோகார்த்த விஷயத்திலும், ஆத்மார்த்தத் துறையிலும், அம்மதங்கள் தன்னால் இயன்ற மட்டும் மாந்தர் கோடிகட்கும் நல்வழிகாட்டி வந்தன. ஆனால், அவற்றில் அநேக மார்க்கங்கள் சத்தியமானவையாயும், இறைவனால் அருளப்பட்டவையாயும் இருந்தும்கூட, பரிபூரணமடையாமல் மறைந்தொழிந்து போயின. இதற்குக் காரணம் யாதெனில், அந்தப் பூர்வ மதங்களில் மனித சமூகத்துக்கு வேண்டிய ஐக்கியத் தன்மையும், முன்னேற்ற சாதனமும், பரிபக்குவ லக்ஷியமும் நிலவியிருக்கவில்லை. சாதாரணமாய் மனிதனுடைய ஆன்ம சாந்திக்கும், ஞான வளர்ச்சிக்கும் வேண்டிய விஷயங்களை மட்டும் அவை போதித்தனவல்லாமல், உலக வாழ்க்கைக்கும் இயற்கைக்கும் ஒத்த முறையில் எடுத்தோதவில்லை. எனவே, மனித சமுதாயம் இடம் பொருள் ஏவலில் மாறுதல் அடைய அடைய, அப்பூர்வ மதங்களின் ஜோதி மங்கி மறைந்து போய் விட்டன.

## துன்மார்க்க எழுச்சி.

பூர்வகால மதங்கள் மனித வாழ்வுக்குப் பொருத்தமாய் அமையாத தால், சன்மார்க்கத்துக்குப் பதிலாய் லோகத்தில் துன்மார்க்கம் பரவியது. மெய்யொளிக்குப் பதிலாய் அக்ஞான அந்தகாரம் வியாபித்தது. இறுதி யில் உலகம் முழுவதுமே வழிக் கேட்டிலாய் விட்டது.

சன்மார்க்கமும் தெய்வ பயமும் அற்றுப்போன படியால், மனித சமூகத்துடைய தன்மையிலே, விபரீதங்களும் வின்னியாஸங்களும் மல்கிப்போய் விட்டன. ஆண்டவனுக்கும் அடியானுக்கு மிடையில் இருக்க வேண்டிய தாரதம்மியம் எடுபட்டுப்போய் விட்டது. எங்கணும் மக்களிடையே தான்தோன்றித் தன்மையும், தற்பெருமைகளும், அட்டூழியங்களும் தலை விரித்தாடின. எளியோரை வலியோர் வாட்டத் தொடங்கினர். பல சாலியும் செல்வந்தனுமே, லோகத்தில் பெரியவ னுகவும், நாயகனுகவும் கருதப்பட்டான்; நல்லது கெட்டது என்ற பாகுபாடு கிடையாது, ஹலால் ஹராம் என்ற வித்தியாசம் மறைந்து விட்டது. பாபத்துக்கும் புண்ணியத்துக்கு மிடையில் திரையில்லாமல் போய் விட்டது. சத்குணம், துற்குணம் என்ற பேதமும் ஒழிந்து விட்டது. சுருங்கக் கூறின், எங்கும் அக்ஞானம் பரவி, அட்டூழியம் மலிந்து, கொலையும் களவும் நாஸ்திகமும் மல்கிப் போய் விட்டன.

அது மட்டுமல்ல. அக்காலை, மனித சமுகத்திலே, மானுஷ்யத் தன்மை அற்றுப் போய், மிருகத்தன்மை உண்டாய் விட்டது. காம இச்சையை பூர்த்தி செய்து கொள்வதும், பிறர் பொருளை பறித்துக் கொள்வதும், ஒருவரை ஒருவர் அடக்கியாள்வதுமே பிரதம காரியாதி களாய் இருந்து வந்தன. இதனுல் மனிதனை விட மிருகமே மேல் என்று எண்ணும் படியாய் உலக வியல் மாறிப் போய் விட்டது.

## இஸ்லாமியச் சூரியோதயம்.

இருளுக்குப் பின் சுடர் பிரகாசிப்பது இயற்கை. ஆம், லோகத் திலே, கிழக்கு தொடுத்து மேற்கு வரை, வடக்குத் தொடுத்து தெற்கு வரை, அதற்கு முன் பிரபஞ்சத்தின் இக்கரை தொடுத்து அக்கரை வரை, பரவி வியாபித்திருந்த காரிருள் மறைந்து மெய்யொளி பிரகாசிக்க நற்காலம் வந்து விட்டது. உலகத்தின் அக்கிரமங்க ளெல்லாம் ஒருங்கு திரண்டு அரபு நாட்டிலேயே வியாபித்திருந்தமையால், இஸ்லாமிய மெய் யொளிச் சூரியன், அவ்வரபு நாட்டி லிருந்தே உதயமாக வேண்டிய அவசியத்தை, எல்லாம் வல்ல இறைவன் உணர்ந்திருந்தான். எனவே அந்த அராபிய பாலைவனப் பிரதேசத்தி லிருந்து சன்மார்க்கப் போதக ராய், நேர்வழி காட்டியாய், இறைவனின் திருத்தூதராய் ஓர் மனித சிரேஷ்டர் தோன்றினுர். அவ்வுத்தம சிலர், பரிசுத்த தூயவேதமாகிய குர்ஆன் போதனைகளைக் கொண்டு, பரவிக்கிடந்த இருட் படலங்களை

விலக்க சுடர்ஒளி காட்டத் தொடங்கினர். அப்பெருந் தகைமையாளர் தமது சொல் செயல் உள்ளம் வாயிலாய் மிகத் தூயராய் விளங்கி, மனித சமூகத்துக்கு வழி காட்டினர். இஸ்லாமிய ஷரீஅத் எனும் தெய்வீக சாஸனத்தை மாந்தர் முன் சமர்ப்பித்து 'இதோ உன் ஆன்மரோகத்தை போக்கி சுகமளிக்க வல்ல அருமருந்து' என்று நல்வாக்கு பகர்ந்தார்.

"சத்தியம் வந்து விட்டது. அசத்தியம் ஒழிந்து விட்டது. நிச்சயமாக அசத்தியம் ஒழிந்து போக வேண்டியதே"

என்ற மூல மந்திரத்தை ஓதி அந்த மஹானுபவர், அஞ்ஞான அந்தகாரத்தை, அரபு நாட்டை விட்டு விரட்டினர். அப்படிப்பட்ட பரிசுத்த நாதர், பரிபூரண வழி காட்டி, பரமனின் திருத்தூதர் தான் நமது லோக தயாளர் முஹம்மது எனும் பெயருடையார்—நபி ரஸூலுல் லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களாவர்.

## இஸ்லாம் புதிய மதமல்ல.

இஸ்லாம் மதத்தின் பல விசேஷங்களில் ஒன்று, அது தனக்கு முன் தோன்றி மறைந்த மதங்களைப் பொய்ப்படுத்தாமலும், முன் உண்டான தீர்க்க தரிசிகளை இழிந்து பேசாமலும், அன்வயித்து அபிமானித்து எற்றுக்கொண்டதாகும். பண்டைய பூர்வ மதங்களின் போதனு சார மெல்லாம் இஸ்லாத்தின் கண் அமைந்திருப்பதால், இஸ்லாம் ஒரு புனித மதம் என்றோ நூதன மார்க்கம் என்றோ எடுத்தோதப்பட வில்லை. பண்டைக்கால மதங்க ளெல்லாம் வான மண்டலத்திலே இருட்காலத்திலே தோன்றும் நட்சத்திரங்களுக் கொப்பானவை. இறுதியாய், தோன்றிய இஸ்லாம் மதம் பெருஞ் சூரியனுக்கு ஒப்பானது. பிரம்மாண்டமான பாஸ்கரன் உதயமானதும் வானவிதானத்து உடுக் கலங்களாம் நட்சத்திரக் கூட்டங்க ளெல்லாம் மங்கி மறைவது போல் தான், இஸ்லாமியச் சூரியன் உதயமானதும் மற்ற மதங்கள் எல்லாம் மங்கி போக வேண்டியதாயிற்று.

இஸ்லாத்தின் போதனைகளும் கட்டளைகளும், மனிதவாழ்க்கைக்கு ஏற்றமுறையில் அமைந்து உன்னதமும் உயர்வும் உடையதாய் இருந்த தால், லோகத்தார் மனமுவந்து அதை எற்றுக்கொண்டனர். இஸ்லாத் தின் போதனைகளில் பழங்கால மதங்களின் முக்கியமான போதனை களும் அடங்கியிருந்ததால், அயல் மதப்போதகர் இதை எற்றுக் கொள்ளத் தலைப்பட்டனர். இஸ்லாம் மதம் பழைய தீர்க்கதரிசிகளையும் பண்டைய நபிமார்களையும் கண்ணியப்படுத்தி கௌரவித்ததால், ஏனை யோர் இஸ்லாத்தைக் கண்யப்படுத்தலானர்கள்.

எனவே, எமது நாயகம் முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அரபு நாட்டின் சூரியனுகத்தோன்றி அஞ்ஞான அந்தகாரத்

திடை வழிகெட்டுத் தடுமாறிக்கொண்டிருந்த பேதை மாந்தர்கட்கு சுடரொளி காட்டி நேர்வழி இன்னதென்று இனிது எடுத்துக்காட்டின மதத்தின்பெயர் தீனுல் இஸ்லாம் என்னும் சாந்திமார்க்கமாகும். சாந்தி மார்க்கம் சத்திய மார்க்கமாகவும் இயற்கைக்கு இயைந்த சுத்த மார்க்க மாகவும் இருந்ததால், ஜனங்கள் கூட்டங்கூட்டமாய் இஸ்லாத்தில் சேர்ந்தார்கள். இஸ்லாம் மதமானது லோக அபிவிருத்திக்கேற்ப மனித முன்னேற்றத்துக்கான எல்லா விவகாரங்களிலும் பன்பதைகட்டு வழி காட்டியாய் விளங்கியதால் அதிசீக்கிரம் இது உலகமெங்கும் வியாபித் தது. "இன்று நாம், உங்கள் மார்க்கத்தை உங்களுக்குப் பரிபூரணமாக்கிக் கொடுத்தோம். உங்கள்மீது எனது அருட்கொடையை நிரப்பமாக்கிவைத் தோம். மேலும் உங்களுக்கு இஸ்லாமையே சன்மார்க்கமாக ஏற்றுக் கொண்டுவிட்டோம்." இது குர்ஆனின் திருமொழி; அல்லாஹ்வின் அருள்வாக்கு. "மனித சமூகத்துக்கு ஏற்றமதம் தீனுல் இஸ்லாம்தான்; இதில்தான் மாந்தருக்கு இகபர இருதிறத்துக்கும் வேண்டிய சகல போதனைகளும் அடங்கியிருக்கின்றன; இஸ்லாத்தை பின்பற்றி நடப் பவர்கள் தான் ஆண்டவனுக்கு மிக பிரியமானவர்கள்; ஆண்டவனுடைய அருட்கொடை யெல்லாம் இஸ்லாமிய ஷரீஅத்தின்படி நடக்கும் முஸ் லிம்களுக்கே உரியது" என்பதே இத்திருவாக்கியத்தின் தாத்பரிய உரை.

"இப்போது உங்களுக்கு, யாதொரு குறைவுமில்லாத பரிபூரண மதம் அருளப்பட்டுவிட்டதால், இனிமேல் நீங்கள் ஆன்ம சாந்தியை யும், முக்தியையும் கோரி வேறொரு மார்க்கத்தையும் தேடியலையவேண் டியதில்லை. ஆகவே, மாந்தர் அனைவரும் இஸ்லாத்தையே இகபர சாதன மாய் கருதி பின்பற்றி ஒழுக வேண்டும்" என்பது இத்திருமொழியின் தாத்பரியமாகும்.

## இஸ்லாமே இயற்கை மதம்

"நீர் உம்முடைய முகமென்னும் சிந்தனையை தீனே ஹனீப் ஆகிய சன்மார்க்கத்தின் பக்கம் நிலை நிறுத்திக் கொள்வாயாக! இதுவே இயற்கை மார்க்கம். இந்த இயற்கைப்படி, ஆண்டவன் மனிதர்களை யெல்லாம் சிருஷ்டித்து வைத்துள்ளான். ஆண்டவனுடைய இயற்கை யமைப்பிலே யாராலும் மாறுதல் செய்ய முடியாது. ஆகவே இதுவே உறுதியான சன்மார்க்கமாகும். இதை மாந்தரில் அநேகர் அறிந்துகொள்கிறார்க ளில்லை" (ஸூரா: ரூம். ஆயத்து: 30)

இயற்கை என்பது இப்பிரபஞ்சக் காரியாதிகள் இயங்குவதற்கு எல்லாம் வல்ல இறைவனால், தன் மகத்தான சக்திகொண்டு, சுயமே இயற்றி வைத்துள்ள வழிமுறையாகும். சூரியன் இயங்கி பிரகாசம் தருவதும், கார்மேகம் சூழ்ந்து வானம் மழை பொழிவதும், மரம் செடி

கொடி யெல்லாம் ஒழுங்குபடி முளைத்து வளர்ந்து பயன் தருவதும் இயற்கை நியதிப்படியாகும். இதே மாதிரிதான் மனித சமூகம் இன்ன மாதிரி ஒழுக வேண்டும், இன்னவிதமாய் நடந்து கொள்ளவேண்டும் என்று ஆண்டவன் வழிமுறை வகுத்து நியதி ஏற்படுத்தியுள்ளான். இதற்குப் பெயர் "பித்ரத்" அல்லது "தீனே ஹனீப்" என்று சொல்லப் பட்டிருக்கிறது.

"தீனே பித்ரத்" (இயற்கை மதம்) என்று இஸ்லாத்துக்கு ஒரு பெயர் உண்டு. ஏனெனின், மனிதனுக்கு ஏற்றமதமாய் இஸ்லாம் அமைந்திருப்பதாலும், மனிதன் இயற்கைக்கு இசைந்து நடந்து கொள்ளவேண்டியிருப்பதாலும் இயற்கைக்கும் இஸ்லாத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்து வருகிறது.

இஸ்லாமே இயற்கை மதம் என்று அல்லாஹு தஆலா கூறி யிருப்பதால், இஸ்லாத்துக்கு முன் உண்டாயிருந்த மதமெல்லாம் கைவிடப்படவேண்டியனவாய் விட்டன. எனவே இஸ்லாம் இறுதி நபியால் நமக்கு போதிக்கப்பட்ட இறுதி மதமாகவும் இயற்கைக்கு மிகமிகப் பொருத்தமான சீரிய மதமாகவும், இனி எவ்வித மாற்றத்துக் கும் பேதகத்துக்கும் இடம்பாடில்லாத மதமாகவும் அமைந்துவிட்டது.

## இஸ்லாத்தின் போதனைச் சிறப்பு.

இஸ்லாம் மதத்தில் மலிந்துள்ள தத்துவங்களைப் பற்றியும், போதனைகளைப் பற்றியும் சற்றே சிந்தித்துப் பாருங்கள். மானுஷ்ய மனப்பான்மை என்னும் தராசு கொண்டு இஸ்லாத்தின் உண்மைகளை சீர்தூக்கிப் பாருங்கள். "இஸ்லாமே இயற்கைக்கும் செயற்கைக்கும் பொருத்தனமான மதம்; இஸ்லாத்தின் போதனைகளே, லோக மதங் களின் போதனைகளில் சிரேஷ்டமானவை" என்பதை கரதலாமலகம் போல் தெள்ளத் தெரிந்து கொள்வீர்கள்.

மனுஷ்யன் சிருஷ்டிப் பொருளாகவும், அடியானுகவும் இருப்ப தால், சிருஷ்டி கர்த்தாவாகிய ஆண்டவனை வணங்கித் துதிக்க வேண்டு மென்ற இயற்கை உணர்ச்சி உடையவனு யிருக்கின்றுன். அப்படிப் பட்ட வழிப்பாட்டிற் கேற்ப, 'அப்து' என்ற அடியானுக்கும் 'மஃபூத்' என்ற ஆண்டவனுக்கு மிடையே என்னென்ன சம்பந்த முண்டென் பதை இஸ்லாம் மதமே சீரிய முறையில் எடுத்துப் போதித்திருக்கிறது. மனிதன் இயற்கையாகவே ஆத்ம சாந்தி வேண்டு மென்ற ஆவல் உடையவனு யிருக்கின்றுன். அப்ப்டிப்பட்ட மாந்தன், ஆத்ம சாந்தியை எங்ஙனம் பெற்றுய்ய முடியும் என்று இஸ்லாமே சுலப முறையில் வழி வகுத்துக் கொடுத்திருக்கிறது.

மனிதன் நித்திய வாழ்க்கையை எப்படி நடத்த வேண்டுமென்பது இக்கால உலகத்தில் அறிவாளிகளிடையே சர்ச்சையி லிருந்து வரும் ஒரு பெரிய பிரச்சனை. சுகம் துக்கம், சிரிப்பு அழுகை, சாந்தி சஞ்சலம், ஏற்றம் தாழ்வு-எல்லாம் கலந்துள்ள ஜீவிய வாழ்க்கையில், ஒவ்வொரு மனிதனும் எப்படி தினசரி நடந்து கொள்ள வேண்டு மென்பதற்கு, இஸ்லாமிய ஷரீஅத்தில் வழி வகுத்து கொடுக்கப்பட்டிருக்கிறது. நாகரீகமும் பொருளாதார சாதனமும் மிக்க இக்காலத்தில் நித்திய மனித வாழ்க்கைக்குரிய பரிபூரண 'புரோகிராம்' இஸ்லாமிய ஷரீஅத்தில் இருக்கிறது. உலகத் தொல்லைகள், சம்பாத்திய சங்கடங்கள், மனோ சஞ்சலங்கள்-இவைகளை விட்டு மாந்தன் விடுபட்டு விசிராந்தி யடைவதற்கு இஸ்லாமிய ஷரீஅத்தே சிறந்த பரிகாரமாகும். உலக விவகாரங்கள் எதுவாயினும் சரி, அதில் இஸ்லாம் மதம் வழி வகுத்துக் காட்டாத விஷயம் எதுவும் இல்லை.

எனவே, ஆண்டவனுக்கும் அடியானுக்கு மிடையில் இருக்க வேண்டிய சம்பந்தம் தொடுத்து, மனிதனுக்கும் மிருகத்துக்கு மிடையில் இருக்க வேண்டிய வித்தியாசங்கள் வரை எல்லா விஷயங்களும் தீனுல் இஸ்லாத்தில் சாங்கோ பாங்கமாக சொல்லப்பட்டிருக்கின்றன. இதையே இன்னொரு முறையில் கூறுவோமாயின் மனிதன் பிறந்ததி லிருந்து வாலிபத் தசை வரையும், வாலிபப் பருவத்தி லிருந்து கிழப் பிராயம் வரையும், பிறகு கிழப் பிராயத்தி லிருந்து மரண மடையும் வரையும் அப்புறம் மரண மடைந்ததி லிருந்து 'மகா நியாயத் தீர்ப்பு நாள்' எனப்படும் 'கியாமத்' வரைக்கும் மனிதனுக்கு என்னனென்ன சம்பவிக்குமோ-எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அதெல்லாம் இஸ்லாமிய ஷரீஅத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. மனிதனுடைய லோகார்த்த-ஆத்மார்த்த துறைகளில் எந்த ஒரு சின்னஞ் சிறு விவகாரமும் இஸ்லாமிய ஷரீஅத்தில், எடுத்தோதப்படாமல் விருதாவாக விடப்பட்டுப் போகவில்லை.

## இஸ்லாத்தின் வெற்றி முறை.

தீனுல் இஸ்லாம் உண்மையான மதம் என்பதற்கும், இது இயற்கைக்கு இயைந்த 'தீனேபித்ரத்' என்பதற்கும் அத்தாக்ஷிகள் அனந்தம் உண்டு. இஸ்லாம் உதயமான காலத்தில் அது எத்தகைய சோதனைக்கு இலக்காகி எத்துணைத் துரிதமாய் வெற்றி பெற்ற தென்பதே போதிய சான்றாகும். நபிகள் பெருமானார் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், இஸ்லாத்தை போதிக்கத் தொடங்கிய காலத்தில், எம்பெருமானார் (ஸல்) அவர்களது குடும்பத்தில் மூன்றே மூன்று பேர் மட்டும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு முஸ்லிம்களாகி யிருந்தனர். அதன் பின் சொற்ப காலத்தில், இஸ்லாமிய கிரணங்கள் வெகு துரிதத்தில் எங்கணும் பரவி வியாபிக்கத் தொடங்கியது. சொற்ப காலத்தி

லேயே ஆச்சரியப்படத்தக்க விதத்தில், அரபு நாடு மட்டுமல்ல உலகம் முழுவதுமே தீனுல் இஸ்லாம் வியாபித்து வெற்றிக் கொடியை நாட்டி விட்டது.

பிரசாரத்தின் பலத்தினலோ, தந்திர உபாயங்களாலோ அத்துணை துரிதத்தில் இஸ்லாம் வியாபித்து விடவில்லே. இஸ்லாத்தின் போதனை களிலே இயற்கையாக அமைந்துள்ள சத்தியம், தத்துவம், பொருத்தம், சுலபம், இணக்கம்-இவைகளின் பொருட்டே அரபு மக்களும் பிற நாட்டு மக்களும் இஸ்லாத்தை தங்கள் முக்திக்குரிய மார்க்கமாக ஏற்றுக் கொண்டு முஸ்லிம்களாகத் திகழ்ந்தார்கள்.

பண்டை போது, இஸ்லாத்தை முஹம்மத் நபி (ஸல்) அவர்களது குடும்பத்தார் மட்டும் முன் வந்து ஏற்றுக் கொண்டனர் என்பதில்லை. அன்னியர்களும் பகைவர்களும் பிறசமயத்தவர்களும், இஸ்லாத்தைப் பற்றி சர்ச்சைப் புரிந்து எதிர்த்துப் போராடி, இறுதியில் அதில் சத்தி யத்தைக் கண்டு ஏற்றுக் கொண்டார்கள். ஆரம்பத்தில் சிலர் இஸ்லாத் திற்கு, எத்துணைக் கெத்துணை விரோதம் பாராட்டினர்களோ, பிறகு அத்துணைக் கத்துணை இஸ்லாத்தின் மீது பற்றும் அபிமானமும் கொண்டு ஆத்ம சாதனமாய் அதை ஏற்றுக் கொண்டார்கள்.

பண்டை போது தீனுல் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பக்தர்கள், அதை தங்கள் உள்ளத்தின்கண் ஜோதியாய் வளர்ப்பதற்கு பெரும் பிரயாசையும் சங்கடமும் மேற்கொண்டார்கள். பிறமதத் தலைவர்களின் கொடுமையோ, அயல் மத வேந்தர்களின் வாளாயுதமோ, அம்முஸ்லிம் பக்தர்களின் மனே உறுதியையும் ஈமானையும் கடுத்தனை கூட அசைத்து விடவில்லை. ஒரு முறை தீனுல் இஸ்லாம் எனும் ஜோதியை தன் உள்ளத்தில் ஏற்றிக் கொண்டவன், மரண பரியந்தம் எத்தகைய சங்க டங்களுக்கும் ஈடு கொடுத்துக் கொண்டு, அந்தச் சுடரைப் பாதுகாத்து வந்தான். பல்லோர் உயிர்விடத் துணிந்தனரே யன்றி, இஸ்லாத்தின் நம்பிக்கையை திரஸ்கரிக்க ஒரு சிறிதும் இணங்கவில்லை.

இக்தெல்லாம் எதைக் குறிக்கிறது. இஸ்லாம் சத்தியமானது, அதன் போதனை ஆத்ம சாந்தி நல்கவல்லது, அதன் இறைவழிபாடு முக்தியை தரவல்லது என்பதையே எடுத்துக் காட்டுகிறது. இன்று உலகத்தில் 70-கோடிக்கு மேல் முஸ்லிம்கள் வியாபித்து வாழ்வதற்கு இஸ்லாத்தின் சத்தியமும் உண்மையுமே காரணமாகும்.

தொடரும்.

# இரத்தச் சின்னம்

## (தொடர் கதை 5—வது பகுதி)

### 10-வது அத்தியாயம்.

குலோரியா, கிரீன் வீட்டில் வேலைக்கு அமர்வதற்கு முன் இருந்த அறைக்குச் சென்றாள். அந்த வீட்டிலுள்ளவர்களுக்குகெல்லாம் இவளின் திருட்டுச் செயல் எட்டியது. இவள் அங்கு சென்றதும், இவளை அறுவெறுப்புடன் நோக்கினார்கள். சந்தோஷகரமான வரவேற்பை காணோம். இவள் கிரீனிடம் வேலை செய்யும் போதும் இந்த அறைக்கு குடிக்குலி கொடுத்து வந்ததனால் இவளுக்கு இந்த இடமாவது தங்க கிடைத்தது.

அது ஒரு சிறிய அறை. மிக சுத்தமாகயிருந்தது. நேராக அறையினுள் சென்று கதவை மூடிக்கொண்டாள். சென்ற வாரம் முழுமையும் தனக்கு நேர்ந்தவைகளைப்பற்றி சிந்தித்தாள். கிரீன்—டாம். இவர்களைப்பற்றி நினைத்தாள். சீ! டாமைப்பற்றி நினைப்பது ஒழுங்கல்லவென்று கிரீனைப்பற்றி நினைத்தாள். அவளுக்கு கிரீன்பேரில் மிக வெறுப்பு. அவர் வீட்டில் வேலை செய்து வந்த காலமுழுவதும் மன நிம்மதி கிடையாது. சாப்பாடு வேலைக்காரர்களுடன் உட்கார்ந்து சாப்பிடவேண்டும். அவள் சாப்பிடுவது எவ்வளவு என்பதை கிரீன் கணக்கிட்டுக் கொண்டிருந்ததையும் அவள் அறியாமலில்லை. அந்த கோடீஸ்வரரின் குணம் அவ்வாறு.

நல்ல வேளையாக கிரீன் தன்னை நேசிக்கவில்லை யென்று நினைத்து சந்தோஷமானாள். அவராவது ஒரு பெண்ணை நேசிக்கிறதாவது என்று நினைத்து தனக்குத்தானே சிறித்தாள். தினசரி தனது வேலைக்காரர்கள் ஏதும் தப்பிதம் செய்கிறார்களாவென்ற யோசனையில் வீடு முழுவதும் சுற்றி சுற்றிவருவார். தனது சாமான்களை தினசரி எண்ணி எண்ணி பார்ப்பார். காலி சாராய புட்டிகளை எண்ணுவதுடன் அதில் போடப்பட்ட கார்க்குகளையும் எண்ணுவார். தனது தோட்டத்தில் ஒரு பூவைத் திருடினாலும் உடனே கண்டு பிடித்து விடுவேன் என்று பெருமை பேசுவார். அவர் தோட்டத்தில் விளையும் காய்கறிகள், புஷ்பங்களை கடையில் கொண்டு போய் விற்றுவிடச் சொல்லுவார். தோட்டக்காரன் ஒரு பழமோ, காயோ எடுக்க இயலாது. இவைகளையெல்லாம் குலோரியா எண்ணிக் கொண்டே சிறித்துக் கொண்டு, தனது உடைகளை மாற்றினாள்.

பிறகு அறையை விட்டு வெளிவந்து புறப்பட்டாள். அவ்வீட்டுக்காரி அவள் போவதை முறைத்துப் பார்த்துக்கொண்டே யிருந்தாள். அடுத்த அறையிலுள்ளவள் வீட்டுக்காரியிடம் “அந்த அறை ஆசாமியும் வந்து விட்டாளே” என்று சொன்னுள்.

“ஆம்! வந்து விட்டாள். இது தான் முதல் தடவை எனது வீட்டில் ஒரு திருடி குடியிருப்பது. இதுதான் கடைசி தடவையும். நான் இன்றே அவளை காலியாகுமாறு நோட்டீஸ் கொடுக்கப்போகிறேன்” என்ருள்.

குலோரியா ஒரு பஸ்ஸில் ஏறி ஒரு தினசரி பத்திரிகையின் ஆபீஸிற்கு போனுள். ஒரு காகிதத்தில் “ஒரு பெண்ணுக்கு செக்ரடரி வேலை தேவை. தங்க யிடமும் சொற்ப சம்பளமும் கொடுத்தால் போதும். சுருக்கெழுத்தும் டைப் அடித்தலும் தெரியும்” என்னும் விளம்பரத்தை எழுதி அதைப் பிரசுரிக்குமாறு சொல்லி, அதற்குரிய பணத்தையும் கொடுத்து விட்டு தனது அறைக்குத் திரும்பினுள்.

வீட்டுக்காரி, ஒரு தட்டில் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு அறைக்கு வந்து வைத்தாள். “குலோரியா, உன்னிடம் நான் சில வார்த்தைகள் பேசவேண்டும்” என்ருள்.

“தயங்காமல் சொல்” என்ருள் குலோரியா.

“அடுத்த வாரத்திற்கு இந்த அறை எனக்கு தேவை”

“அதாவது நான் காலியாக வேண்டுமா?”

“ஆம்! எனது வீட்டில் உன்னைப் போலுள்ளவர்களை வைக்க இயலாது”

“என்னைப் போலென்ருல் என்ன?”

“நீ அழகான பெண் தான். இருந்தாலும் எனது வீட்டிற்கு கெட்ட பெயர் வர எனக்கு பிடிக்கவில்லை. உன் விஷயம் ஒன்றும் இரகசியமில்லை. நானும் தினசரி பத்திரிகை படிப்பவள் தான். நீ திருடி அகப்பட்டது எனக்கு தெரியாத தல்ல” என்ருள் வீட்டுக்காரி.

“ஓஹோ அப்படியா! சரி. அடுத்த வாரம் காலி செய்து விடுகிறேன்”

“இன்னென்று சொல்ல விரும்புகிறேன்” என்று வீட்டுக்காரி சொல்ல “போதும். சொன்னது போதும் அறையை விட்டு வெளியே போ” என்று குலோரியா அதிகாரத் தோரணையில் சொல்லி அவளை வெளியே தள்ளி கதவை மூடினுள்.

மாலை நேரம் நெருங்கியதும் குலோரியா ஒரு கெரோஸீன் விளக்கை ஏற்றிக்கொண்டு, ஏதோ ஒரு புஸ்தகத்தை எடுத்து பிரட்டிக் கொண்டிருந்தாள். திடீரென்று கதவு தட்டும் சப்தம் கேட்டதும், திறந்து பார்க்க, வீட்டுக்காரி, குலோரியாவுக்கு போஸ்ட்டில் வந்த ஒரு கடிதத்தை கொண்டு வந்து கொடுத்து, "உன் சிநேகிதர்களுக்கெல்லாம் நீ காலியாகும் விஷயத்தைத் தெரிவித்து விடு. காலியான பின்னால் உனது கடிதங்கள் இங்கு வந்து எனக்கு தொல்லை கொடுக்கும்" என்றாள்.

"இந்த மோசமான வீட்டிலிருப்பதை எனது சிநேகிதர்களுக்குத் தெரிவிக்க வெட்கப்பட்டு, நான் யாருக்கும் இங்கிருப்பதாக தெரிவிக்கவில்லை. ஆதலால் நீ ஒன்றும் கவலைப்படவேண்டியதில்லை" என்று சொல்லியவாறு, வீட்டுக்காரியின் பதிலை எதிர்பாராது கடிதத்தை வாங்கிக்கொண்டு, கதவை மூடினாள்.

கடிதத்தை விளக்கினருகே கொண்டுபோய் உடைத்துப்பார்க்க, உள்ளே சதுரமான வெள்ளை கார்டிருந்தது. அதில் சிகப்பு வட்டம் குத்தப்பட்டிருந்தது. நடுவில் அச்செழுத்தில் "எங்களுக்கு உனது சேவை தேவை. நாளை இரவு 10 மணிக்கு எட்வர்ட் ஸ்கொயரினருகே வரும் காரில் ஏறிக்கொள்" என்று எழுதியிருந்தது. அதை மேஜையின் பேரில் வைத்துவிட்டு யோசித்தாள். இரத்த சின்ன சங்கத்திலிருந்து தனக்கு கடிதம் வருமென்று இவள் எதிர்பார்த்திருந்தாலும், இவ்வளவு சிக்கிரம் வருமென்று நினைக்கவில்லை.

## 11-வது அத்தியாயம்.

10 மணிக்கு இன்னும் 3 நிமிஷமிருந்தது. எட்வர்ட்ஸ்கொயர் மூலையில் ஒரு கார் வந்து நின்றது. சில நிமிஷங்களுக்குள் குலோரியா அங்கு வந்து யாதும் தயங்காமல் காரினுள் ஏறினாள். காரினுள் இருட்டாக யிருந்தது. டிரைவர் உட்கார்ந்திருப்பது தெரிந்ததே தவிர யாரென்று தெரியவில்லை. கார் ஸ்டார்ட் செய்யவில்லை. டிரைவரும் இவள் பக்கம் பின்புறம் திரும்பவில்லை. முன்பக்கம் பார்த்தவாறு "நீ நேற்று திருடு சம்பந்தமாக போலீஸிடம் அகப்பட்டு விடுதலையானாய். நேற்று தினசரிபத்திரிகையில் செக்ரடரி வேலைக்காக விளம்பரம் செய்தாய். இன்னொரு வேலை கிடைத்தால் அங்கும் ஏதாவது திருடிக்கொண்டு ஜீவிக்கலா மென்பது உனது எண்ணம்" என்று டிரைவர் சொன்னான்.

"என்னை இங்கு கூப்பிட்டது எனது சரித்திரத்தை எடுத்து கூறவா? உனது கடிதம் வந்ததும், செக்ரடரிவேலை கிடைக்கு மென்றும் எண்ணத்துடன் ஓடிவந்தேன். நான் ஒன்று கேட்க பிரியப்படுகிறேன்" என்றாள் குலோரியா.

"நீ கேள் பதில் சொல்வது என் பிரியம்" என்றான் டிரைவர்.

"சரி நான் இங்கு வருவதற்குமுன் போலீஸ் இன்ஸ்பெக்டர் பென்டனுக்கும், துப்பறியும் நிபுணர் ஸிம்ஸனுக்கும் தெரிவித்துவிட்டு, வந்திருந்தால்?" என்று கேட்டாள்.

"நீ இதற்குள் அந்த பிளாட்பாரத்தில் இறந்து கிடப்பாய். குலோரியா உனக்கு சுலபமாக பணம் கிடைக்கும் வழி காண்பிப்பதுடன் ஒரு வேலையும் கிடைக்குமாறு செய்கிறேன். நீ உனது திருட்டு வழக்கத்தை விட்டாலும் சரி, விடாவிட்டாலும் சரி, நான் சொல்வதுபடி மாத்திரம் செய்யவேண்டும். என்ன?" என்று டிரைவர் கேட்டான்.

"சரி" என்றாள்.

"உனக்கு தேவைப்படும் பணம் தருவேன். அபாயத்தில் உதவி செய்ய தயங்க மாட்டேன். என்னை மோசம் செய்தால் உன்னை தொலைக்கவும் பின்னடைய மாட்டேன்"

"தெரிகிறது" என்றாள்.

"உனது வேலை மிக சுலபமானது. நாளை மாரீஸ் பேங்குக்கு போய் மிஸ்டர் மாரீஸை சந்தி. அவருக்கு ஒரு செக்ரடரி தேவையாயிருக்கிறது"

"நான் சந்தித்ததும் வேலை கொடுப்பாரா? எனது பேரைமாற்றி சொல்லவேண்டுமா?" என்று கேட்டாள்.

"அதெல்லாம் வேண்டியதில்லை. உனது பெயரையே சொல். நான் சொல்வதற்கு எதிர்த்து பேசாதே. உனது இந்த வேலைக்காக 200 பவுண்டு கொடுக்கிறேன். இதோ பணம்! முன்பே வாங்கிக்கொள்" என்று டிரைவர் சொல்லி தனது கையை தனது தோளின்மேலாக பின்பக்கம் நீட்டினான். அதிலிருந்து இரண்டு நூறு பவுண்டு நோட்டுகளை குலோரியா வாங்கும்போது அவளது கை, டிரைவரின் தோள் மேல் பட்டது. டிரைவர் அணிந்துள்ள கோட்டுக்கு கீழ் ஏதோ கடினமான வஸ்து யிருந்ததாகத் தெரிந்தது. "உடம்பில் துப்பாக்கி குண்டுபாய்வதை தடுக்க அணிந்துள்ள இரும்பு கவசம்" என்று தனக்குத்தானே யோசித்தாள்.

"மாரீஸ்யிடம் எனது பழைய சரித்திரத்தைப்பற்றி ஏதும் சொல்லவேண்டுமா?" என்று கேட்டாள்.

"அதெல்லாம் தேவையில்லை. உனக்கு அடிக்கடி எனது கடிதம் வரும். அதன்படி நடக்கவேண்டும். அவ்வளவுதான்" என்றான் டிரைவர்.

சில நிமிஷங்களுக்குப்பின் குலோரியா ஒரு டாக்ஸி காரில் ஏறி தனது அறைக்கு சென்றாள். அந்த டாக்ஸியை பின் தொடர்ந்து இன்னுமொரு டாக்ஸி மெதுவாக சென்றது. குலோரியா தனது வீட்டு

தெருவின் மூலையிலேயே டாக்ஸியை நிற்பாட்டி இறங்கி தனது வீடு வரை நடந்து போய் தெருக்கதவை திறந்தாள். பின் டாக்ஸியில் வந்த இன்ஸ்பெக்டர் பென்டனும் தூரத்தில் இருந்தே இவளை கவனித்தார். குலோரியாவுக்கு தன்னை ஒருவர் பின் தொடர்ந்து வந்தது தெரிந்திருந்தும் அதைக் கவனிக்காததுபோல் வீட்டில் நுழைந்தாள்.

இன்ஸ்பெக்டர் பென்டன் அங்கேயே உலாவியவாறு அவள் வீட்டிற்குள் நுழைவதைப் பார்த்ததும், திரும்பிதான் வந்த டாக்ஸியில் ஏறினர். ஏறும் சமயத்தில் யாரோ ஒரு மனிதன் இவரை இடித்தவாறு அவசரமாக நடந்து போனுன். உடனே பென்டன் திரும்பி பார்த்தார். "ஸ்மித்" என்றுக் கூப்பிட்டார். வேகமாக நடந்து போனவன் திரும்பிப் பார்த்தான். அவனுடைய உட்சாகம் குன்றியது. "ஓ! இன்ஸ்பெக்டரா? இங்கு எங்கு சார் வந்தீர்கள்."

"உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும் என்னுடன் வா"

"நான் ஒன்றும் செய்யவில்லையே சார். நான் என்ன தப்பு செய்தேன்" என்றான்.

"தெரியும் நீ ஒன்றும் செய்யவில்லை. அன்று ஜெயிலில் இருந்து வரும் பொழுது ஒழுங்காக நடப்பதாக நீ தான் சொல்லி இருக்கிறயே"

"ஆமாம் ஸார் தற்போது ஒழுங்காக நடந்து வருகிறேன். கலியாணங்கூட செய்துக் கொள்கிறேன்."

"கலியாணமா! யாரை? லூஸியை யா, ஜேனையா?"

"ஜேனதான்" என்று சொல்லிக் சொல்லிக் கொண்டே இவர்களை எல்லாம் இன்ஸ்பெக்டர் ஞாபகம் வைத்திருப்பதை நினைத்து மனதிற்குள்ளேயே இன்ஸ்பெக்டரை வைதான். "ஜேனும் ஒழுங்காக தான் இருக்கிறள். அவளும் ஒரு கடையில் வேலைப் பார்த்து வருகிறள்" என்று ஸ்மித் சொன்னுன்.

"ஏன் ஒரு கடை என்கிறய் மாரீஸ் பாங்கில் வேலை செய்கிறள் என்று சொல்லுமே"

"அவள் மிக ஒழுங்கானவள் சார். அவளைப் பற்றி ஒன்றும் கெட்டது எண்ண வேண்டாம் ஸார். நானும் அவளும் ஒழுங்காகவே நல்லவழியில் நடந்து வருகிறேம்"

"ஆஹா! மிக சந்தோஷகரமான சாமாச்சாரம். தற்போது ஜேன் எங்கு வசிக்கிறள் ?"

"ஆற்றுக்கு அந்த புரத்தில் சார். என் சார் ஒழுங்காக வாழ்ந்து வரும் அவளிடம் போய் பழய கதைகளைப் பிறட்ட போகிறீர்களா?"

"சீ! சீ!! அதலாம் ஒன்றும் இல்லை. சிறிது அவளிடம் பேச வேண்டும். அதுவும் அவ்வளவு அவசரமாக இல்லை. பின் பார்த்துக் கொள்ளலாம்" என்று சொல்லி இன்ஸ்பெக்டர் டாக்ஸியில் ஏறினர். டாக்ஸி புறப்பட்டது. ஒரு அறை மணி நேரத்திற்குபின் தங்களது கிளப்புக்கு போனர். அங்கிருந்த ஸிம்ஸனுடன் இரத்த சின்ன சங்கத்தைப்பற்றிக் கலந்து ஆலோசித்தார். ஆனல் அந்த சம்பாஷணை யில் தான் குலோரியாவை பின் தொடர்ந்ததைப்பற்றி பென்டர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை.

மறுநாள் அதி காலை இருவரும் சார்லியை கொலைக்குற்றம் சாட்டப்பட்டு அடைத்து வைத்திருக்கும் இடத்திற்கு போனர்கள். முன்பே டாமும் கூட வருவதாகக் கேட்டுக் கொண்டமையால், டாமை யும் கூப்பிட்டுச் சென்றனர். டாம் கூடச் சென்றிருந்தும், பென்டனும் ஸிம்ஸனும் சார்லியை சந்தித்து பேரம் பேசும் போக டாமை அருகே யிருக்கவிடவில்லை.

சார்லி எழுதப்படிக்கத் தெரியாதவன். இதற்கு முன் போலீஸிடம் அகப்பட்டவன் என்று அவனது கை விரலின் ரேகை மூலம் பென்டன் கண்டு பிடித்தார்.

முதல் விசாரணையில் சார்லி கொலை குற்றத்தை ஒப்பவில்லை. ஆனல் ஸிம்ஸனின் திறமையான குறுக்கு விசாரணைக்கு பதில் சொல்வதில், குற்றத்தை ஒத்துக்கொண்டான்.

"ஆம் நான் தான் கொன்றேன்" என்று கடைசியாக ஒத்துக் கொண்டான். அவன் சொன்னதை யெல்லாம் ஒரு போலீஸ் அதிகாரி சுறுக்கெழுத்தில் எழுதிக்கொண்டார்.

"என்னை எப்படியோ பிடித்து விட்டீர்கள். நான் குடித்திரா திருந்தால் உங்கள் கையில் மாட்டியே யிருக்க மாட்டேன். தற்போது இக்கொலை செய்ததை ஒத்துக் கொள்வதுடன், சில மாதங்களுக்கு முன் தாமஸ் என்பவனையும் நான் தான் கொலை செய்தேன் என்று ஒத்துக் கொள்கிறேன். எத்தனை கொலை செய்திருந்தாலும் என்னை ஒருமுறை தான் தூக்குப் போடமுடியும். தாமஸ் என்னுடன் கப்பலில் வேலைசெய்து வந்தான். ஒரு பெண் விஷயமாக தகராறு ஏற்பட்டதால் அவனைக் கொன்று கப்பலிலிருந்து கடலில் தள்ளிவிட்டேன்.

"இந்த கொலை விஷயம்:—நான் கப்பலை விட்டு கீழிறங்கி ஊருக்குள் வந்து குடித்து அலைந்ததால், கப்பல் சென்றுவிட்டது. அதுவுமல்லாமல் நான் தங்கியிருந்த ஹோட்டலி லிருந்து அதிகமாக குடித்து ஆடுவதால், வெளியே தள்ளப்பட்டேன். குடிவெறியில் வெளியில் உபத்திரவம் செய்ததால், போலீஸால் பிடிக்கப்பட்டு, ஒருவார சிறைச் சாலை தண்டனை கிடைத்தது. அந்த முட்டாள் ஜட்ஜ் எனக்கு ஒரு

மாத தண்டனை கொடுத்திருந்தால் இந்த கொலை நடந்திருக்காது. நான் சிறைச்சாலையிலிருந்து ஒரு வாரத்திற்கு பின் விடுதலையடைந்து வெளியே குடிக்க சாராயம் எங்காவது கிடைக்குமா வென்றலைந்தேன். அப்பொழுது எனக்கு பல்வலியும் அதிகமிருந்தது.''

பல்வலி என்று சார்லி சொன்னதும் இன்ஸ்பெக்டர் பென்டன் ஆச்சரியத்துடன் ஸிம்ஸனைக் கடைக்கண்ணால் பார்த்தார். ஸிம்ஸன் சிறிது சிறித்தவாறு சார்லி சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"அன்றிரவு நான் இவ்வாறு திரியும்போது, மழையும் தூத்த ஆரம்பித்தது. எனக்கோ தங்கயிடமில்லை. அச்சமயத்தில் எனக்கு அருகாமை ஒரு கார் வந்து நின்றது. உள்ளிருந்த டிரைவர் 'ஏறிக் கொள். ஏறிக்கொள்' என்றான். அவன் யாரைச் சொல்லுகிருனென்று நான் என்னைச் சுற்றிப்பார்த்தேன். 'சார்லி உன்னைதான்' என்றான்.

"நான் ஆச்சரியத்துடன் காரினுள் ஏறினேன். கார் புறப்பட்டது. வெளிச்சமில்லாத ஒரு சிறிய தெருவினுள் நுழைந்ததும் நின்றது.

"டிரைவர் நான் யாரென்பதை முதலில் சொன்னான். எனது சரித்திரம் பூராவும் சொல்லியதுடன் தாமஸை கொன்ற விபரத்தையும் சொன்னான். நான் அதைக்கேட்டதும், பட்ட ஆச்சர்யத்திற்கு அளவேயில்லை. பிறகு பணம் சம்பாதிக்க இஷ்டமாவென்று கேட்டான். 'ஆம்' என்றேன்.

"ஒரு கிழவன் எங்கோ வசித்து வருவதாகவும் அவன் இந்த டிரைவருக்கு அதிக கஷ்டங்கள் கொடுத்து துன்புறுத்துவதாகவும் அவனைத் தொலைக்கவேண்டுமென்றும் சொன்னான். அக்காரியம் என்னால் செய்ய முடியாதென்றேன். அவன் எப்படியாவது தாமஸைக் கொன்றதை போலீஸிடம் தெரிவித்து என்னை தூக்கு கழுவில் ஏற்ற முடியுமென்று பயமுறுத்தினான். அதுவுமல்லாமல் இந்த கொலையைச் செய்ததும் சுலபமாக தப்பித்து ஓட ஒரு சைகிளும் கொடுப்பதாக சொன்னான். கடைசியில் அவன் சொல்படி ஒத்துக்கொண்டேன். ஒரு வாரத்திற்குப்பின் அவன் ஏற்பாட்டின்படி எட்வர்ட் ஸ்கொயரில் அவனை சந்தித்தேன். எவ்வாறு கொலைபுரியவேண்டு மென்று விபரங்களைச் சொன்னான். நான் அன்றிரவு இருட்டானதும் பெர்ரிதோட்டத்தினுள் நுழைந்து செடிகளுக்குள் மறைந்து உட்கார்ந்து கொண்டேன். தினசரி காலையில் பெர்ரி தனது தோட்டத்தில் உலாவ

வருவது வழமையென்று அவன் சொல்லியிருந்தான். ஆனால் நான் தோட்டத்தில் உட்கார்ந்து ஒரு மணிநேரத்திற்குப் பின் ஒரு சப்தம் கேட்டு பயந்தேன். யாரோ ஒரு மனிதன் அந்த பக்கம் வந்ததாகத் தெரிந்தது. முகம் சரியாக இருட்டில் தெரியவில்லை. ஆனால் பருமனாக இருந்ததாகத் தெரிந்தது. உடனே அந்த ஆள் மறைந்து விட்டார்.

"அன்று காலை அந்த கிழவன் நடந்து வந்தான். நான் சுட்டேன். மற்றவை சரியாக ஞாபகமில்லை. ஏனெனில் நான் என்னுடன் ஒரு சாராய புட்டியை வைத்து இரவெல்லாம் தோட்டத்தில் குடித்துக் கொண்டிருந்தேன். ஆனால் சைகில் மறைத்து வைக்கப்பட்ட யிடத்திற்கு வந்து சைகிலை ஓட்டியது ஞாபகமுண்டு. அப்படியே ஓடி தப்பித்திருப்பேன். குடிவெறி யிருக்கவே இவ்வாறு மாட்டிக் கொண்டேன்" என்று விபரமாக சார்லி சொன்னான்.

"அந்த டிரைவர் யாரென்று தெரியுமா?" பென்டன் கேட்டார்.

"எனக்குத் தெரியாது. இருட்டில் முகத்தைப்பார்க்க முடியவில்லை. ஆனால் அவன் ஒரு வார்த்தையை அடிக்கடி உபயோகித்து வந்தான். சிலரின் வழமை சில வார்த்தைகளை தங்களது சம்பாஷணையில் அடிக்கடி உபயோகிப்பார்கள். அதைப்போல் இவனும் ஒரு வார்த்தையை அடிக்கடி உபயோகித்தான்"

"அது என்ன வார்த்தை?" என்று அவசரத்துடன் பென்டன் கேட்டார்.

அவன் தலையை வறண்டிக்கொண்டே "அதுதான் ஞாபகம் வரவில்லை. மறந்து விட்டேன். ஞாபகம் வந்ததும் தெரிவிக்கிறேன்" என்று சொல்லி யோசித்துக்கொண்டிருந்தான் சார்லி.

இருவரும் அவனிடம் அறியவேண்டியதை கேட்டாய் விட்டதென்று அங்கிருந்து புறப்பட்டார்கள்.

சுமார் 4 மணி நேரத்திற்குப்பின் ஜெயிலின் அதிகாரி, சார்லிக்கு சாப்பாடு கொண்டு போனார். அவன் கட்டிலின்பேரில் படுத்திருந்தான். "எழுந்திரு" என்று சப்த மிட்டார். எழுந்திருக்கவில்லை. அருகே போய் பார்க்க, இறந்துகிடந்தான். அவனுக்கருகே தண்ணீர் குடிப்பதற்கு வைத்துள்ள டம்ளரில் பாஷாண ஜலம் கொஞ்சம் யிருந்தது.

இன்ஸ்பெக்டர் பென்டனுக்கு பாஷாணம் ஒன்றும் பெரியதாகத் தோன்றவில்லை. ஆனால் அந்த தண்ணீரில் மிதந்த ஒரு வட்ட சிகப்பு காகிதத்தைப்பார்த்து பிரமித்தார்.

(தொடரும்.)

# அழைக்கின்றோம் !

வேளாங்கண்ணி A. M. M. இப்ராஹீம்

அழைக்கின்றோம் அழைக்கின்றோம்
அல்லாஹ்வின் பாதையிலே
விழைவிதாய் அரவணைத்து
வருக வருக இளைஞர்காள் ! (1)

நாகரீகத்தின் ரீதியிலே
நன்மார்க்கம் சிதைவுற்று
ஏகும் நாளை எண்ணிடாது
ஏனோ இந்த கேளிகூற்று ! (3)

வான்முட்ட பொருள் குவித்து
வைரப்பட்டாடை விரித்து
நான் என்ற மமதை இங்கே
நரகலோகம் மன்னிக்காது ! (3)

சுல்த்தான் என்ற பெயராலே
சோமுவாக மாறும் கோலம்
கல்த்தா கொடுக்கும் காலம்
கதறினலும் கேளான் இறையோன் ! (4)

நுங்களது நற்றோழன் தான்
நுகர்ச்சி ஈயும் பொற்குர்ஆன்
திங்களென கரத்தினிலே
திகழட்டும் திக்கெங்கும் ! (5)

ஆயிரத்தி நான்கு நூறு
ஆண்டுகளின் அறிஞர் நபி
தூய சொன்னடையைத் தழுவி
துணிந்திதோ அழைக்கின்றோம்! (6)

# டர்க்கி பால்கன் யுத்த சரித்திரம்

இதில் ஐரோப்பா கண்டத்திலுள்ள புராதான இராஜ்ஜியமாகிய டர்க்கிக்கும், பால்கன், ஸர்வியா, மாண்டி நீக்ரோ, யூனன் (கிரீக்) முதலிய இராஜ்ஜியங்களுக்கும், உலக முதலாவது யுத்தத்திற்கு முன்பு, நடந்து வந்த அற்புதமாகிய சண்டைகளைப் பற்றி மிக விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

விலை ரூ. 2

# அஹ்காமுல் முஸ்லிமீன்

## (ஹனபி)

கலிமாக்கள், ஈமான், இஸ்லாம், உலு, முழுக்கு, ஹைலு, நிபாஸு, தண்ணீர், தயம்மம், நஜீஸு, தொழுகைகளின் வக்துகள், தொழுகைகளின் வரிசைகள், தொழுகையை விட்டவனுடைய வேதனை, தொழுகையின் பறுலுகள், தொழுகிற ஒழுங்கு, ஜமாஅத்துடன் தொழுகிற வரிசைகள், வித்று தொழுகை, நபில் தொழுகை, தருவீஹ் உடைய வரிசைகள், ஜும்ஆ உடைய வரிசை, மையித்துடைய விஷயங்கள், ஸகாத்தின் பயான், நோன்புடைய விரிசைகள், ஹஜ்ஜுடைய வரிசைகள், நபி நாயகம் (ஸல்) அவர்களின் ரவுலா ஷரீபை ஸியாரத்து செய்கிறது ஆகிய இந்த விஷயங்களைப் பற்றி பேசும் பாடங்கள் இதில் நிறைந்திருக்கின்றன.

இவைகள் அல்லாமல் இன்னும் எண்ணற்ற விஷயங்கள் இந்த புஸ்தகத்தின் தக்மிலா என்று சொல்லப்படும் பாகத்தில் கூறப்பட்டிருக்கின்றன. இதன் விலை ரூ. 1—0—0

ஷி அறபுத் தமிழ் போட்டோ அச்சு கலிகோ பைண்டு ரூ. 1—8—0

ஷி தமிழ் ஷாபி மதுஹபுக் குரியது அறபி வார்த்தைகள் அறபியிலும் சேர்க்கப் பட்டது. ரூ. 1—0—0

ஷி அறபுத் தமிழ் போட்டோ அச்சு ஷாபி மதுஹபுக் குரியது கலிகோ பைண்டு ரூ. 1—8—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

நெ 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக்
# நிஜாமுத்தீன் ஔலியா

## ஸர்ஸரீன் பக்ஷ் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹு)
## அவர்களின் ஜீவிய சரித்திரம்.

### (1–வது பகுதி)

இப்னு காஜா அஹமத், பின் காஜா அலி புகாரி, பின் சையத் அப்துல்லா, பின் சையத் ஹுசேன், பின் சையத் அலி, பின் சையத் அஹமத், பின் சையத் அபி அப்துல்லா, பின் சையத் அலி அஸ்கர், பின் சையத் ஜாபர், பின் சையத் அலி ஹாதி, பின் இமாம் முஹம்மது ஜவாத், பின் இமாம் அலி ரஸா, பின் இமாம் மூஸா காஸிம், பின் இமாம் ஜாபர் ஸாதிக், பின் இமாம் முஹம்மத் பாகர், பின் இமாம் ஜைனுலாபிதீன், பின் ஹஸ்ரத் அமீருல் முமினீன் இமாம் ஹுசைன் (ரலி).

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் தாயாரின் கோத்திர வழியும் சையத்ஹுசைனியைச் சார்ந்தது.

அதாவது தாயார் பெயர் சுலைகா பீபீ. இவர்கள், சையதினு அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் கலிபாவாக இருந்து வந்த சையத் முஹம்மத் அஸ்ஹர் அவர்களின் அருமை புதல்வியாவர். மேற்சொன்ன கலீபாவின் தந்தைப் பெயர் சையக் ஹுசைன்; இவர், மேலே வந்துள்ள வமிசப்பாரம்பரையின் பிரகாரம், சையத் அலி உடைய புதல்வர்.

இதை அனுசரித்து இங்கு கணவர் மனைவியார் இரு தரப்பில் உள்ள கோத்திர சம்பந்தமும் ஒன்றாக கூடி விட்டது. ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களின் தந்தை வழியைச் சேர்ந்த மூதாதைகள் மிக்க கல்வி யறிவும் உயரிய சாந்த குணமும் படைத்தவர்களென 'மிர்அத்துல் அஸ்ரார்' என்ற நூலில் வரையப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் அவர்களின் தாயாரது மூதாதையான காஜா அரப் என்பவர்களும் தந்தையாரது மூதாதையான காஜா அலி என்பவர்களும் முதன் முதல் இந்தியாவுக்கு வந்து லாகூரில் தங்கினார்கள். அதற்கப்பால் அவர்கள் 'பதாயூன்' நகரை யடைந்து அங்கேயே தங்கள்

182034

வாசத்தை ஏற்படுத்திக் கொண்டதற்குப் பின்னர், இருவருக்கிடை உறவு ஏற்படலாயிற்று. அதாவது காஜா அரப், என்பவர்கள் தம் புதல்வியாகிய பீபீ சுலேகாவை காஜா அலியின் குமாரராகிய காஜா அஹமத் என்பவருக்கு நிக்காஹ் செய்து வைத்தார்.

காஜா அஹமத் அவர்கள் விசேஷ மதபக்தரும் முதிர்ந்த பேணுத லுடையவராயு மிருந்த படியால் அக்காலத்திய அதிபதி அவரை பதாயூன் நகருக்கு 'காஜி' யாக நியமனம் செய்தார்.

இவருடைய சமாதியும் பதாயூனிலேயே இருந்து வருகிறது. நிற்க வல்ல நாயன் மேலே கூறப்பட்டுள்ள திருமணத் தம்பதிகளின் வயிற்றி லிருந்து மஃரிபத்திலும் கராமத்துகளிலும் (மெய்குணத்திலும் மகிமைகளிலும்) தலை சிறந்து விளங்கி வரும் குத்புல் அக்தாப் ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களை, ஹிஜ்ரி 634-ல் ஸபர் மாதம் 27ந் தேதி கடைசி புதன் கிழமை சூரியன் உதயமான சமயத்தில், பதாயூனிலேயே அவர்களின் புனித தாயார் வயிற்றி லிருந்து ஈன்ற வைத்தான்.

ஹஸ்ரத் அவர்கள் கடைசி புதன் கிழமை தினம் ஜனித்தார்கள் என்பதை முன்னிட்டே பிரதி வருஷத்திலும் புதன் கிழமை யன்று அவர்கள் திரு சமாதியும் குசுல் செய்விக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு கழுவி விடப்பட்ட குசுல் ஜலம் தபர்ருக் (பிரசாதம்) போல் வழங்கப் படுகிறது. ஹஜ்ரத் சுல்தானுல் மஷாயக் அவர்கள் தம் ஜீவிய காலம் முழுவதிலும் வருஷந்தோறும் கடைசி புதன் கிழமை குசுல் செய்து வந்தார்க ளென்ற கொள்கை நாளது வரையிலும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

ஹஸ்ரத் அவர்கள் 5-வது பிராயத்திற்கு வந்ததும் தங்கள் தந்தை யாகிய காஜா அஹமத் சாஹிபு அவர்களை இழந்து யதீம் (தந்தை யிழந்த பிள்ளை) ஆகி விட்டார்கள். ஆனால் பிராயத்திற்கு எய்தியதும் பரிபூரண பயபக்தியுடன் பகிரங்க கல்வியைக் கற்பதில் அமர்ந்து விட்டார்கள்.

அவர்களுடைய பிராயம் இருபத்தைந்துக்கு எட்டியபோது தம் தாயார் அவர்களை டில்லிக்கு அழைத்து வந்து அங்குள்ள புரானுகில்லா (பழைய கோட்டை)க்குச் சமீபமாயுள்ள ஒருவரின் வீட்டுக்கு வெளியில் உள்ள தாவாரத்தில் தங்கி யிருந்தார்கள்.

பிறகு இரண்டாவது தடவையாக மற்றொருவரின் கூரை போட்ட மாடி வீட்டின் மீது வாசம் பண்ணினார்கள்.

அக்காலத்தில் மௌலானா "ஷம்ஸ்கார்ஸமி" என்னும் நாமமுள்ள பெரியார் ஒருவர் கல்வியறிவில் அரும்பெரும் வித்வானாக விளங்கி வா

லானார். அநேகர், அவரிடஞ் சென்று கல்வி பயின்று வந்தனர். ஹஸ்ரத் அவர்களும் அந்த அறிவாளரிடமே மதக்கல்வியை பயின்று அதை பூர்த்தி செய்தார்கள்.

ஹஸ்ரத் மௌலானா அவர்களுக்கு தம் மாணவராகிய நிஜாமுத்தீனிடத்தில் விசேஷ அன்பு ஏற்பட்டிருந்தது மட்டுமன்றி ஹஸ்ரத் மௌலானா அவரை மிக்க சங்கையோடுங்கூடி உபசரித்து வந்தார்கள்.

மௌலானா கமாலுத்தீன் பெயர் கொண்ட மற்றொரு உஸ்தாதிடத்தில் "மஷாரிகுல் அன்வார்" என்னும் சிறந்ததோர் கிரந்தத்தையும் ஓதி முடித்தார்கள். அதன் பேரில் மௌலானா தம் கை படவே அவர்களுக்கு யோக்கியதாபத்திரம் எழுதிக் கொடுத்தார்கள்.

மௌலானா கமாலுத்தீன் உண்மையில் மிக்க தக்வா (பேணுதல்) உடையவர்கள் என்பதற்கு அத்தாட்சியாக இங்கு ஒரு விஷயம் குறிப்பிடத் தகுந்தது. அதாவது பல்பன் சுல்தானாகிய கியாசுத்தீன் அவரது குணாதிசயங்களை கேள்வியுற்று அவரை தம் பேஷ்இமாமாக நியமிக்க முயற்சித்தபோது மௌலானா கமாலுத்தீன் அவர்கள் "என்னிடத்திலோ தொழுகை ஒன்றைத்தவிர வேறெவ்வித பொருளும் கிடையாதாகையால் பாதுஷா விருப்பத்திற்காக நான் இவ்வரிய பொருளையும் எவ்வாறு விட்டுவிட முடியும்" என்று துண்டித்த பதிலளித்துள்ளார்கள். மௌலானா கமாலுத்தீன் டில்லியிலேயே அடக்கமாயிருக்கிறார்கள்.

இனி ஹஸ்ரத் நிஜாமுத்தீன் சுல்தானுல் மஷாயக் அவர்களின் ஜாகை ஷய்க் நஜீபுத்தின் முதவக்கல் என்பவரின் இருப்பிடத்திற்கருகில் ஏற்பட்டது. இந்த இரு பெரியார்களுக்கிடை பூரண நட்பு இருந்து வந்த காலத்திலேயே ஹஸ்ரத் நிஜாமுத்தீன் தாயார் அவர்களும் காலமானார்கள்.

"அக்பாருல் அக்யாரில்" அதை இயற்றிய ஆசிரியர் பின் வருமாறு எழுதுகிறார்:—

ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் நிஜாமுத்தீன் ஔலியாவின் வயது 12 ஆக இருந்து வந்த சமயம் அவர் ஒரு நாள் ஓர் அகராதி கிதாபை எடுத்து அதை கவனித்துக் கொண்டிருந்தார்.

அப்போது அபூபக்கர் பெயர் கொண்ட கவ்வால் (புலவர்) தங்கள் உஸ்தாத் சமூகத்திற்கு வந்து ஷய்க் பஹாவுத்தீன் அவர்களால் இயற்றிய சில கவிகளையும் கஸீதா என்னும் புகழ் பாடலையும் பாடிவிட்டு ஷய்க் அவர்களின் வேலைக்காரிகள் மாவு அறைக்கும் சமயத்திலும் ஜிக்ரு செய்து வருவார்களென்பதைக் குறித்து அவர்களை சிலாகித்

துப் பேசினர். ஆயினும், அது சமயம் சுல்தானுல் மஷாயக் அவர்களுக்கு அதுபற்றி மனதில் எவ்வித உணர்ச்சியும் ஏற்படவில்லை.

பிறகு ஒரு சமயம், புலவர் அஜூத்ஹன் நகருக்கு வந்து ஷய்க் பரீதுத்தீன் என்னும் மஹானைக் கண்டு அவர்களின் உத்தம குணாதிசயங்களையும் அல்லா உடைய பாதையில் அவர்கள் அரும்பாடு பட்டு அடைந்துள்ள தக்வாவின் சிறப்பைப்பற்றியும் விவரித்த போது அதை செவியுற்ற சுல்தானுல் ஔலியா அவர்கட்கு ஷய்க் சம்பந்தமான ஆவலும் பிரீதியும் மனதில் ஒருவாறு பொங்கலாயின.

எழுந்திருக்கும் போதும் உட்காரும்போதும், தூக்கத்திலும் விழிப்பிலும், உண்ணல், குடித்தல் ஆக எச்சமயத்திலும் ஷய்க் உடைய ஞாபகம் உள்ளத்தில் துடிக்கத் தொடங்கிற்று. அதற்கப்புறந்தான் பதாயூனை விட்டுப் புறப்பட்டு டில்லி நகரையடைந்து, மதக்கல்வியைக் கற்று, யோக்கியாம்சப் பத்திரத்தை அடைந்தார்கள்.

முரீது வாங்குவதற்காக சுல்தானுல் மஷாயக் அவர்கள் அஜூத் ஹனில் உள்ள ஷய்க் பரீதுத்தீன் அவர்கள் சந்நிதானத்தில் ஆஜராகி மரியாதை செய்து முரீது வாங்கிய பின்னர் தம் ஷய்க் இடத்தில் "இனி நான் கல்விப் பயிற்சியை இத்தோடு நிறுத்தி விட்டு நவாபில் சம்பந்தமான தொழுகை இபாதத்தில் ஈடுபட்டு விடலாமா?'' என்று வினவியபோது ஷய்க் அவர்கள் "நான் ஒருவரையாவது கல்வி கற்க வேண்டாமென்று தடுக்க மாட்டேன், நீங்கள் இரண்டு துறைகளிலும் ஈடுபட்டு விடுங்கள். ஏனெனில் தர்வேஷ் (பகீர்) இல்மு (கல்வி) கற்க வேண்டியது அத்தியாவசியமாகும். இல்லையேல், அவன் ஷைதானுடைய மோசத்தனத்திற்கு ஆளாகி விடக் கூடும்'' என்று விடை பகர்ந்தார்கள்.

முரீது கொடுத்த சிறிது காலத்திற்குப் பிறகு ஹிஜ்ரி 1672-ஹு ரபீயுலவ்வல் மாதம் 21ந் தேதி கடைசி புதன் கிழமை தினம் கிலாபத் கிர்கா (சட்டை)வும் அவர்களுக்கு அருளப்பட்டது. அதன் பின் அவர்கள் டில்லிக்குச் செல்ல அனுமதி யடைந்தார்கள்.

ஹஸ்ரத் சுல்தானுல் ஔலியா அவர்கள் விவரிக்கிறார்கள் :—

நான் அஜூத்ஹன் நகரில் என் ஷய்க் சமுகத்தில் தங்கி யிருந்த காலம் வரையில், ஷய்க் அவர்கள் கொடிய செலவு கஷ்டத்திற்குட் பட்டிருந்தார்கள்.

அவர்களின் முரீதுகளுள் ஒருவர் வெளியிற் சென்று தண்ணீர் கொண்டு வருவார், ஒருவர் விறகு, ஒருவர் காட்டிலிருந்து கிழங்கு கொண்டு வந்து சமர்ப்பிப்பார். நான் அக்கிழங்குகளை அவித்து ஷய்க் அவர்களுக்கெதிரில் கொண்டு போய் வைப்பேன்.

அவர்கள் அவைகளினின்றும் கொஞ்சம்போல் எடுத்துப் புசித்து நோன்பு திறப்பார்கள். மீதியான கிழங்குகள் தம்மைச் சேர்ந்தோருக் கிடையில் பகிர்ந்து விடுவார்கள்.

ஒரு நாள் சம்பவம் யாதெனில், நான் கொஞ்சம் போல் உப்பை கடன் வாங்கி, கிழங்குகளில் போட்டு அவிழ்த்தேன். அவிழ்த்த கிழங்குகளை ஒரு டம்ளரில் போட்டு ஷய்க் அவர்களுக்கு முன் வழக்கப்படி கொண்டு போய் வைத்த உடனே ஷய்க் அவர்கள் "எனக்கு இதில் ஏதோ சந்தேகப்படுகிறபடியால் நான் இதை தின்ன முடியாது" என்று மொழிந்தார்கள்.

அவர்கள் அவ்வாறு மொழிந்ததைக் கேட்ட நான் "மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாக் அவர்களும், ஷய்க் ஜமால் ஹான்ஸ்வி அவர் களும் தனித்தனியே கொண்டு வரும் ஒவ்வொரு பதார்த்தத்தையே நான் சமைக்கிறேன். தாங்கள் சந்தேகப்படும்படியான காரணம் எனக்கு விளங்கவில்லையே" என்று முறையிட்டேன்.

அதற்கு அவர்கள் என்ன சொல்லுகிறார்களெனில், "தர்வேஷ் (பகீர்) நப்ஸின் ருசி அல்லது இன்பத்திற்காக பிறரிடம் கடன் வாங்குவதைவிட உயிரை விட்டு விடுவதையே மேலெனக் கருதுவர். கிழக்கு மேற்கு இவ்விரு திசைகளுக்கிடை எவ்வளவு தொலை உண்டோ அவ்வளவே தவக்கல், கடன் என்பவைகளுக்கிடை அமைந்துள்ளது."

அப்பொழுது, நான் இனி ஒருவரிடத்திலும் கடன் வாங்க மாட் டேன் என்பதாக வாக்குறுதி செய்தேன். உடனடியாகவே ஷய்க் அவர்கள், தாம் வீற்றிருந்த கம்பளியை யெடுத்து என் கையில் கொடுத்து "இதோ வாங்கிக் கொள்ளும்; இனிமேல் பிறருடைய தயவை நீர் எதிர்பார்த்திருக்க மாட்டீர்" என்றார்கள்.

மேலும், நான் டில்லிக்கு புறப்படும் சமயத்தில் ஷய்க் அவர்கள் என்னை நோக்கி "சத்துருக்களையும் சந்தோஷப்படுத்துவாய்; வாங்கின கடனை தீர்த்து விடுவாய்" என்று உபதேசித்தார்கள். நான் டில்லி வந்து சேர்ந்ததும் ஷய்க் நஜீபுத்தீன் என்பவரை முலாகாத்து செய்து என்னு டைய வரலாறுகளையாவும் அவர்களுக்கு எடுத்துரைத்தேன். அவர்கள் அவைகளையெல்லாம் கேட்டு சந்தோஷப்பட்டு "மௌலானா! நாம் இரு வரும் பீர்பாய்கள் (ஒரே குருவிடத்தில் உபதேசம் பெற்ற சகோ தரர்கள்) ஆகிவிட்டோம்" என்றார்கள்.

ஹஸரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் விவரிக்கிறார்கள் :—

எனக்கு போதிய அளவிற்கு இபாதத் செய்வதற்காக, டில்லி யில் வசதியான இடம் கிடைக்காமற் போனதால் நான் காட்டிற்கு போய் விடுவது வழக்கம். ஒரு நாள் காட்டில் உள்ள ஓர் குளக்கரையில்

உட்கார்ந்து குர்ஆன் திலாவத் செய்து கொண்டிருந்தேன். அங்கு பகீர் ஒருவருக்கு பேரின்பக் காதலினுல் ஆடல் அசைதலுக்குரிய நிலைமை ஏற்பட்டு விட்டது. சற்று நேரத்திற்குப் பின் நான் அவரிடம் "நீங்கள் நகரில் வசிக்கிறீர்களா?" என்று கேட்ட போது அவர் "நகரம் இபாதத்திற்கு தகுதியான இடமில்லை. வணக்கத்திற்குரிய உண்மையான இன்பத்தை யடைய காடே தகுந்தது" என்றுர்.

அந்த தர்வேஷ் சம்பாஷணை முடிந்தவுடன் நான் ஓர் தோட்டத்திற்குள் போனேன். உலுச் செய்து, 2 ரக்அத் தொழுது கொண்டு பின் வருமாறு துவா கேட்டேன்: "இறைவனே! எனக்கு எந்த விடம் தகுதியாகும் என்று நீ நினைக்கிருயோ அதை எனக்கு அறிவிப்பாய். நான் அங்கேயே போய் நிலைபட்டு விடுகிறேன்" அதற்கான தெய்வீக உத்திரவு எனக்கு கிடைத்தது. விடை யாதெனில் "உனக்குரிய இடம் கியாஸ்பூர் என்பது. அங்கு போய் குடியேறு." அவ்வாறே நான் கியாஸ்பூர் ஸ்தலத்தை யடைந்து பொது மக்களுக்கு நல்லுபதேசங்களை புகட்டி வரலானேன்.

நான் போன தினத்தி லிருந்தே ஆயிரக் கணக்காக முரீதுகளும் விசுவாசிகளும் என்னிடம் வரப்போகத் தொடங்கினர். மாசுத்தீன் கேகபாத் பாதுஷாவும் அதே ஸ்தலத்தில் புதிய பாட்டண மொன்றை ஸ்தாபித்தார். அதன் பொருட்டு மந்திரிகளும், சீமான்களும், கூட்டங் கூட்டமாக அங்கு திரண்டு வரலாயினர். ஜனத்தொகையை அதிகரிக்கக் கண்ட நான், இனி அங்கு வசிப்பது சரியல்ல வென்று எண்ணினேன். இப்படியாக எண்ணி வரும் சமயத்தில் என்ன நடந்த தென்றுல், அஸ்ரு தொழுகை சமயத்தில், அழகிய மேனியும் மெலிந்த சரீரமும் வாய்ந்த வாலிபனொருவன் என்னிடத்திற்கு வந்து சொல்லுகிருர்:—

"நீங்கள் ஆரம்பத்திலேயே தம்மைப் பற்றி பிரஸ்தாபித்திருக்கக் கூடாது. எப்பொழுது பிரஸ்தாபம் ஏற்பட்டு விட்டதோ கியாமத் நாளில் ரஸூலுல்லா (ஸல்) அவர்களுக்கு முன் வெட்கமடையாதிருக்கக் கூடிய முறையில் நடந்து கொள்ள வேண்டும்", அவர் மேலும் "ஜனங்களினின்றும் விலகி அல்லா உடைய இபாதத்தில் ஈடுபட்டிருத்தல் அவ்வளவ திறமையான காரியமல்ல. ஜனங்களுக்கிடை யிருந்து கொண்டு தான் இபாதத் செய்வது சிறந்த காரியம்" என்று கூறினுர்.

அப்பால், நான், சிறிதளவிற்கு சாப்பாடு கொண்டு வந்து அவருக்கு முன் வைத்தேன். அவரோ, அதை சாப்பிடவில்லை.

வாலிபர், வாயலாய் மேற் கூறப்பட்ட மொழிகளை கேட்டதற்குப் பிறகு நான் அந்த ஸ்தலத்திலேயே வசிக்க வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டேன். என்னிடம் வந்த அவ்வாலிபர் கொஞ்சம் ஜலத்தை

மாத்திரம் பருகி விட்டு மறைந்தார்.

ஷய்க் அப்துல்ஹக் முஹத்திஸ் தெஹலவி எழுதுகிறார்கள் :—

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள், பின்னர் அதே விடத்திலேயே வாசம் ஏற்படுத்திக் கொண்டார்கள். பிரமுகர், பாமரர் எல்லோருமே திரள் திரளாக வந்து அவரது அனுக்கிரகத்தை பெறலாயினர். ஹஸ்ரத் ஔலியா அவர்கள் எப்போதுமே நோன்பு நோற்பது வழக்கம். சாயங்காலம் நோன்பு திறக்கும் போது பழைய ரொட்டித் துண்டே அவர்களுக்கு போதுமானதாக இருந்து வந்தது. ரொட்டியும் கிடைக்காமற் போனால் சும்மா இருந்து விடுவார்கள்.

சிற்சில வேளைகளில் அவர்களின் வேலைக்காரர் அவர்கள் சமுகத்தில் "ஹஸ்ரத்! தாங்கள் இப்தார் நேரத்திலும் மிக்க குறைவாக புசிக்கிறீர்கள். இப்போதும் நான் கொண்டுவந்திருக்கும் ஆகாரத்தை வேண்டாம் என்கிறீர்களே. இதனால் தங்கள் பலஹீனம் அதிகரித்து விடாதா?" என்று முறையிடுவார்.

அப்போது ஹஸ்ரத் நிஜாமுத்தீன் அவர்கள், "ஆ! எத்தனையோ மிஸ்கீன் பகீர்கள் இச்சமயமும் பள்ளிவாசல், சத்திரம் முதலிய விடங்களில் பசியால் வாடிவதங்குகிறார்களே அவர்களை நினைக்கும்போது இந்த ஆகாரம் என்தொண்டையில் எவ்வாறு இறங்கும்? போதும் எடுத்துச் செல்" என்று அழுதவண்ணமாக பதிலளிப்பார்கள்.

ஹஸ்ரத் அவர்களின் கீர்த்தி நாளடைவில் அதிகரித்தபோது, அமீர்சைபுத்தீன், ஹிஸாமுத்தீன் அஹமத், காஜா குஸ்ரு ஆகியவர்களும் ஆஜராகி அவர்களிடம் முரீது வாங்கினார்கள். இச்சமயம் காஜா அமீர்குஸ்ருவின் வயது 20.

நிற்க, ஹஸ்ரத் அவர்களிடம் 'ஸமா' என்னும் புகழ் பாடக் கச்சேரி நடப்பதுண்டு. அதுபற்றிய தகவல் பாதுஷா கியாஸுத்தீன் தக்லக் என்பவருக்கு எட்டியபோது அவர் உள்ளத்தில் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியாவைக் குறித்து ஒருவித அருவெறுப்பு ஏற்படலாயிற்று. அதன்பேரில் பாதுஷாவானவர், ஹஸ்ரத் அவர்களுடைய வேலைக்காரர்களுக்கு பல்வேறு கஷ்ட சங்கடங்களை விளைவிக்கவும் எண்ணினார்.

ஆண்டவன் செயல்! இத்தகவல் சுற்றுப் பிரயாணி யொருவர் வாயலாய் முல்தானில் உள்ள ஷய்க் ருக்னுத்தீன் அவர்களுக்கு எட்டியது. ஷய்க் ருக்னுத்தீன் அவர்களுக்கு ஹஸ்ரத் நிஜாமுத்தீன் அவர்கள் பால் விசேஷ அன்பும் நேசமும் இருந்து வந்தபடியால் அவர்கள் இத்தகவலைக் கேட்டதும் உடனே டில்லிக்கு புறப்பட்டு ஹஸ்ரத் ஜாகையில் தங்கினார்கள்.

அடுத்த நாள் 'ஸமா' மஜ்லிஸ் நடைபெற்றது. ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் அவர்களுக்கு ஸமாவின் உணர்ச்சி நிலைமை ஏற்பட்டதும், ஷய்க் ருக்னித்தீன் அவர்கள் எழுந்து நின்று அவர்கள் கைச் சட்டையை பிடித்திழுத்து உட்காரவைத்தார்கள்.

மீண்டும் சிறிது நேரத்திற்குள் ஹஸ்ரத் எழுந்திருக்கவே அவர்கள் சட்டையின் கீழ் ஓரத்தைப்பற்றி இழுத்து அவர்களை வீற்றிருக்கச் செய்தார்கள்.

கொஞ்ச நேரத்திற்குப்பின் ஹஸ்ரத் அவர்களுக்கு மீண்டும் 'வஜத்' என்னும் பேரின்பக்கொதிப்பு ஏற்பட்டு அவர்கள் எழுந்து அசையத் தொடங்கினதும் ஷய்க் ருக்னுத்தீன் நபில் தொழுகையில் அமர்ந்துவிட்டார்கள். அதற்குப்பின் ஸமா மஜ்லிசும் முடிவுற்றது.

மஜ்லிஸ் முடிவடைந்ததும் மௌலானா முஹம்மத்ஷா இமாம் என்பவர், ஷய்க் ருக்னுத்தீனிடஞ் சென்று, "மௌலானா அவர்களே! ஸமா மஜ்லிஸ் நடந்து கொண்டிருந்த சமயம் தாங்கள் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஒளலியாவின் கைக்சட்டையை முதல் தடவையாகவும், அவர்கள் சட்டையின் கீழ் ஓரத்தை இரண்டாவது தடவையாகவும் இழுத்து உட்காரவைத்ததற்குப் பின், மூன்றாவது தடவையாக, தொழுகையில் அமர்ந்து விட்டீர்களே. அதன் ரகசியத்தை தயை கூர்ந்து எனக்கு சொல்வீர்களாக" என்று மரியாதையுடன் கேட்டுக் கொண்டார்கள். (தொடரும்.)

18034

Edited by M. S. Abdul Khudus.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# இஹ்யா உலூமுத்தீன்

# மொழி பெயர்ப்பு.

## புதிய இரண்டாம் பதிப்பு.

(தமிழ்)

இஸ்லாமிய சன்மார்க்க ஞானப் பொக்கிஷமாய் விளங்குவது இமாமுல் மஃரிபத் வத்தரீகத் ஹஜ்ரத் இமாம் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அரபு பாஷையில் இயற்றிய இஹ்யா உலூமுத்தீன் என்னும் பாரதூரமான கிரந்தம். அது மௌலவி ஆலிம்களுக்கு மதரஸாக்களில் கற்பிக்கப்படுத்துவது யாவரும் அறிந்த விஷயம். அந்த அற்புதமும் மகிமையும் வாய்ந்த இஸ்லாமிய ஞான மார்க்க நூலின் மொழி பெயர்ப்பே இந்த இஹ்யா உலூமுத்தீன் ஆகும். அரபு உர்து தெரியாத தமிழ் முஸ்லிம்களும், இஸ்லாமிய அனுஷ்டானத்தத்துவ ஞானங்களையும், இக்கித்தாபின் வாயிலாய் ஐயமறத் தெரிந்து கொள்ளலாம். இதில் ஷரீஅத், தரீகத், மஃரிபத், ஹகீகத் என்னும் நான்குவித மார்க்கங்களும் விளக்கப்பட்டிருக்கிறது. ஈமான், இஸ்லாம், அகீதா, ஹதீஸ், தலீல் முதலிய ஆதாரங்களோடு, இஸ்லாம் மதானுஷ்ட சட்டதிட்ட பர்லு, ஸுன்னத்து, முஸ்தஹப்பு, மக்ரூஹ், ஹராம் முதலிய மஸ்அலாக்களெல்லாம் இந்நூலின் கண், மிகத் துலாம்பரமாய் விளக்கப்பட்டிருக்கிறது. இதன் பெருமை எழுதிச்சொல்லித் தெரியக்கூடியதில்லை. இந்த நூலினைக் கையில் எடுத்துப் படித்துப் பார்த்தாலே தெரியவரும்.

நெடுநாட்களுக்குப் பிறகு இந்நூல் அச்சாயிருப்பதால் பிரதிகளுக்கு ஆடர் தர முந்திக்கொள்ளுங்கள்.

இதன் விலை ரூ. 5

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# ஜவாஹிறுல் பவாயித்.

ஆறும் பதிப்பு

இப்புத்தகத்தில் 1-வது அல்லாஹு தஆலா வின் திருநாமங்களாகிய 'அஸ்மாஉல் ஹுஸ்னு' என்னும் அழகிய 99-இஸ்முகளும், ஒவ்வொன் றுக்கும் தனித்தனியே தர்ஜுமாக்களும் தக் ஸீறுகளும், காஸியத்துகளும்; 2-வது 'அஸ்மா உல் இலாம்' அதாவது நபிமார்கள் ஓதி வந்ததும் ஷர்ஐ விட்டும் தனித்ததுமான 40-அஸ்மாக் களும், அவைகளில் வெளியாகும் அநேக கைபி யத்து, அஜாயிபு முஃஜிஸாத்து, அஸ்றுறு முத லான மட்டில்லாத பிரயோஜனங்களும்; 3-வது 'ஹயாத்துல் ஹைவான்' என்னும் உயிர்பிராணி கள் சகல ஜந்துகள் ஒவ்வொன்றின் குணுகுணங் களும், அவைகளின் அவயவ மென்னும் அங்கங்களால் மனிதர்களுக்கு உண்டாகும் பற்பல வியாதிகளுக்கு அவிழ்தங்களும், இன்னும் ஹதீது களும், ஹிக்காயத்துகளும்; 4-வது மனுமுடைய தஃபீர் என்னும் கனவு நூலும், அதில் எவ் வண்ணமாய் கனவு கண்ட காக்ஷிகளுக்கும் விரிவாகிய தஃபீர்களும், அதற்கு அத்தாக்ஷியாகிய அநேக ஹிக்காயத்துகளும்; 5-வது வைத்திய சுருக்க மென்னும் சகல வியாதிகளுக்கும் நுட்ப பரிகாரங்களும், இன்னும் அநேக பாயிதாக்களும் இருக்கின்றன. இவற்றின் அரபு இஸ்முகளை மாத்திரம் லெத்தோ கிருப்பில் அரபியிலும் மற்றவை யெல்லாம் சுத்த தமிழாலும் அச்சிட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

விலை ரூ. 6—0—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ், 5.